வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 24.05.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 144 பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல. 285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல. 390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer - மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


# இலங்கையை பொறுப்புக்கூறச் செய்யும் ஆணையை ஐ. நா. புதுப்பிப்பது அவசியம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

● பாதிக்கப்பட்டோரை மௌனமாக்க அரசு முயற்சி

நியூயோர்க், மே 24

**இலங்கையின் பொறுப்புக்கூறல் செயல்திட்டத்துக்கான ஆணையை செப்ரெம்பர் அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை புதுப்பிப்பது மிகவும் அவசியம் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பணிப்பாளர் எலைன் பியர்சன் நேற்று வியாழக்கிழமை விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

கடந்த மே 17ஆம் திகதி ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பணிமனை விடுத்த அறிக்கையில் - முடிவடைந்த போரில் தீர்க்கப்படாத ஆயிரக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வழக்குகளை தீர்ப்பதற்கு சர்வதேச வழக்குகள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

உள்நாட்டுப் போரில் தனது படைகள் செய்த அட்டூழியங்கள் - அநீதிகளை இலங்கை

11

## ஜனாதிபதி ரணில் இன்று வடபகுதிக்கு வருகிறார்!

யாழ்ப்பாணம், மே. 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக இன்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதன்படி 3 நாட்கள் விஜயமாக வடக்கு வரும்



ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க, யாழ்ப்பாணம்,

11

## சீரற்ற காலநிலை; 4 பேர் பலி

கொழும்பு, மே. 24

நாட்டில் நிலவும் பலத்த மழையினால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி இதுவரை நால்வர் பலியாகினர்.

மாதம்பே-குளியாப்பிட்டி வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளொன்றின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் 39 வயதான பெண்ணொருவர் உயிரிழந்தார்.

நாத்தாண்டிய, பில கட்டுமுல்ல பகுதியில் நேற்று

11

## சர்வதேசத்தின் முயற்சியை பிரபாகரன் நிராகரித்தார்!

### இதுவே அழிவை ஏற்படுத்தியது என்கிறார் எரிக் சொல்ஹெய்ம்



கொழும்பு, மே 24

இறுதிப் போரின் போது பல்லாயிரக்கணக்கான பொது மக்களையும் விடுதலை புலிகளையும் போர் வலயத்தில் இருந்து வெளியேற்றி பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லும் முயற்சி நிராகரிக்கப்பட்டதால் ஆயிரக்கணக்கான உயிர்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சர்வதேச நாடுகளின் ஒருங்கிணைப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த முயற்சிக்கு ஆரம்பத்தில் ஒப்புதல் அளித்திருந்த புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதித் தருணத்தில் தனது முடிவை மாற்றியமை

11

## பெரமுனவின் வேட்பாளரை எதிர்பார்க்கிறோம்

உதய கம்மன்பில



கொழும்பு, மே 24

பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களாணையுடன் மீண்டும் ஆட்சி அமைத்தால் பண்டாரநாயக்கா குடும்பத்துக்கு ஏற்பட்ட அரசியல்கதியே ராஜபக்ஷர்களுக்கும் ஏற்படும். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை எதிர்பார்த்துள்ளோம் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித்

11

## கொரிய மனித உரிமை விருது இலங்கை தமிழ் பெண்மணிக்கு!



சியோல், மே 24

தென்கொரியாவின் மே 18 நினைவு அறக்கட்டளை மனித உரிமைகளுக்காக வழங்கி வரும் "குவாங்ஜூ" விருது ஈழத் தமிழ் பெண்ணான சுகந்தினி மதியமுதன் தங்கராசுவுக்கு

11

## திருகோணமலை விபத்தில் பருத்தித்துறை சிறுமி பலி!

### 4 வயது சிறுவன் படுகாயம்!

திருகோணமலை, மே 24

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியை விட்டு விலகி விபத்துக்கு உள்ளானதில் 6 வயது சிறுமி உயிரிழந்தார். அவரின் சகோதரனான 4 வயது சிறுவன் படுகாயமடைந்துள்ளார்.

திருகோணமலை - ஈச்சிலம்பற்றில் மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் யாழ்ப்பாணம் - வட



மராட்சி - பருத்தித்துறையை சேர்ந்த நிதர்சன் ஆதித்தியா வயது 6 என்ற சிறுமியே உயிரிழந்தார். அவரின் சகோதரனான

11

## காற்றாலை மின்சார உற்பத்திக்கு மன்னார் பொருத்தமான இடமல்ல!

### சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

மன்னார், மே. 24

காற்றாலை மின் உற்பத்திக்கு மன்னார் பொருத்தமான பிரதேசம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் ஏற்பாடு செய்த விசேட கூட்டம் நேற்று காலை மன்னாரில் இடம்பெற்றது. குறித்த கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

நேற்று இந்தப் பத்தியில் மூத்த ஊடகவியலாளர் வீரகத்தி தனபாலசிங்கம் அவர்கள் தனது 'எக்ஸ்' தளத்தில் எழுதிய குறிப்பு ஒன்று பற்றி எழுதியிருந்தேன். அதனைப் படித்துவிட்டு அவர் ஒரு குறிப்பை நேற்று அனுப்பியிருந்தார். அது சற்று நீண்டுவிட்டாலும், அவர் கருத்தை சுருக்கமாக இங்கே தருவது சரியாக இருக்காது.

பலரின் கட்டுரைகளை வெட்டி சுருக்கி அழகுபடுத்தி பத்திரிகையில் வெளியிடுவதில் பல வருட அனுபவம் வாய்ந்தவர் அவர். அவரே எழுதிய குறிப்பு ஒன்றில் 'கைவைக்க' முடியவில்லை. அதனால் அதனை அப்படியே முதலில் இங்கே தருகின்றேன்:

"விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் அவரது மனைவி பிள்ளைகளுக்கும் டென்மார்கில் வசிக்கும் அவரது தமையனார் மனோகரன் குடும்பம் மே 18 ஏற்பாடு செய்திருந்த முதன்முதலான அஞ்சலி நிகழ்வு குறித்த செய்தியை எமது தமிழ்ப் பத்திரிகைகள் பிரசுரிக்காதது குறித்து 'எக்ஸ்' சமூக ஊடகத்தில் நான் செய்திருந்த பதிவு குறித்து ஊர்க்குருவி நேற்று எழுதியிருந்தது.

எனது எக்ஸ் பதிவை நானூறுக்கும் அதிகமானவர்கள் பார்த்திருக்கிறார்கள். ஆனால், ஊர்க்குருவி அதைப் பற்றி எழுதியதால் ஈழநாட்டின் இணையப் பதிப்பு மூலம் வெளிநாடுகளில் பரந்தளவில் தமிழர்கள் மத்தியில் எனது கருத்து சென்றடைய உதவியதற்கு முதலில் மனம் நிறைந்த நன்றி.

எனது பதிவைப் பார்த்த பிறகு உடனடியாக என்னுடன் தொடர்பு கொண்டவர்கள் இருவர். ஒருவர் ஈழநாடு குகநாதன். மற்றையவர் தமிழன் பத்திரிகை ஆசிரியர் சிவராஜா. தங்களது குழுமத்தின் டான் தொலைக்காட்சி டென்மார்க் நிகழ்வு குறித்து செய்தியை ஒளிபரப்பியதாக குகநாதனும் தமிழன் பத்திரிகை படத்துடன் அந்த செய்தியை முன்பக்கத்தில் பிரசுரித்திருத்ததாக சிவராஜாவும் கூறினார்கள். எனது கவனக்குறைவுக்காக அவர்களிடம் வருத்தம் தெரிவிக்கிறேன்.

என்றாலும் பரந்தளவில் தமிழ்ப்பத்திரிகைகள் டென்மார்க் நிகழ்வு குறித்த செய்தியைப் பிரசுரிக்கவில்லை என்பது உண்மையே. எதைப் பிரசுரிப்பது என்று தீர்மானிப்பது என்பது அந்தந்த பத்திரிகை ஆசிரியர்களுக்கு உரிய உரிமையும் அதிகாரமும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

எனது கவலை எல்லாம் கடந்த நவம்பரில் ஒரு போலித் துவாரகா நிகழ்த்திய மாவீரர் தின உரைக்கு அநாவசியமாக பெரும் முக்கியத்துவத்தை கொடுத்த தமிழ் பத்திரிகைகளுக்கு பிரபாகரனுக்கு அவரது குடும்பத்தவர்கள் 15 வருடங்களுக்கு பிறகு செய்த அஞ்சலி முக்கியமான ஒரு செய்தியாகத் தெரியவில்லை என்பதுதான்.

பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரெனவும் நாளடைவில் மீண்டும் போராட்டத்தை தொடங்குவதற்கு "அண்ணன்" வருவார் என்றும் கூறிக்கொண்டு புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் உள்ள சில சக்திகள் தமிழர்களிடம் பணத்தை சேர்ப்பதாக நாம் அறிந்திருக்கிறோம். மனோகரன் குடும்பம் ஏற்பாடு செய்த அஞ்சலி நிகழ்வு அந்த மோசடி சக்திகளுக்கு நிச்சயம் பாதிப்பாக அமையும்.

அத்துடன், பிரபாகரன் இருக்கிறார் என்று கூறிக்கொண்டு 'வியாபாரம்' செய்யும் கும்பல்கள் உண்மையில் அவரும் குடும்பமும் செய்த தியாகத்தை கொச்சைப்படுத்துகிறார்கள். பிரபாகரன் மீது பேரபிமானம் கொண்டவர்களாக தங்களைக் காட்டிக்கொள்ளும் எம்மவர்களில் பலருக்கு இது ஏன் தர்மாவேசத்தை ஏற்படுத்தவில்லை என்பதே எனது கேள்வி.

எமது தமிழ் அரசியல்வாதிகளும்கூட இதைப்பற்றி எதையும் பேசவில்லை. தமிழகத்தில் பழ. நெடுமாறனும் காசி ஆனந்தனும் இன்னமும் வாய் திறக்கவில்லை. அவர்கள் இருவரும் போலித் துவாரகாவின் உரையை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் பெரிய திரையில் ஒளிபரப்பி அங்குள்ளவர்களுக்கு படம் காட்டினார்கள்.

தங்களது மாயைகளும் கற்பிதங்களும் தகர்ந்துவிடும் என்ற பயத்தில்தான் பலரும் உண்மைகளை நேர்மையுடன் ஒத்துக்கொள்வதில்லை. மாயைகளால் தமிழ் மக்களைக் கட்டிப்போடும் ஓர் அரசியலை முன்னெடுப்பதில்தான் இன்று தமிழ்ப் பகுதிகளில் அக்கறை காட்டப்படுகிறது.

தொடர்ந்தும் வானத்தில் நிலாவைக் காட்டி சோறு ஊட்டும் விபரீதம் வேண்டாம். குழந்தைகளுக்கு வேண்டுமானால் அவ்வாறு ஊட்டிவிட்டு போகட்டும். பெரியவர்களுக்கும் அல்லவா அப்படிச் செய்யலாம் என்று இன்னமும் நம்பிக்கையுடன் செயல்படுகிறார்களே...?"

மேற்காணும் குறிப்பையே தனபாலசிங்கம் அவர்கள் அனுப்பியிருந்தார். நேற்று இந்தப் பத்தியில் "நாய் மனிதனைக் கடித்தால் செய்தியல்ல, மனிதன் நாயைக் கடித்தால்தான் செய்தி" என்று சபாரத்தினம் மாஸ்ரர் கூறியது பற்றி எழுதியிருந்தேன்.

போலி துவாரகாவுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை ஏன் அவரது மறைவை அவரது சகோதரர் ஏற்றுக்கொண்டதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்ற அவரது ஆதங்கம் புரிந்துகொள்ளக் கூடியதே.

"அண்ணன்" வருவார் என்று கூறிக்கொண்டு புலம்பெயர் மண்ணில் சிலர் "வியாபாரம்" செய்வது எப்படியோ, அதேபோலவே சில வியாபாரிகளை வைத்துக்கொண்டு அண்ணனுக்கு அஞ்சலி செய்வதற்கும் வித்தியாசம் இருப்பதாக ஊடகங்கள் கருதவில்லையோ என்ற சந்தேகத்தையே நேற்றைய பத்தியில் எழுப்பியிருந்தோம்.

ஆனாலும் போலிக்கு கொடுத்த முக்கியத்துவத்தை ஏன் இதற்கு கொடுக்கவில்லை என்றே தனபாலசிங்கம் அண்ணர் கேட்கிறார். அதுவும் நியாயமான ஆதங்கம்தான்.

தனபாலசிங்கம் அண்ணரும் இந்த ஊர்க்குருவியும் ஒரு மேசையில் எதிரெதிரே இருந்து கதைத்துக் கொண்டிருந்த போது மேசையில் ஒரு தண்ணீர் போத்தல் இருந்தது. அதனை எடுத்து ஊர்க்குருவி அரைவாசியை குடித்துவிட்டு மேசையில் வைத்தார்.

இதனை செய்தி ஆக்குகின்றபோது, "ஊர்க்குருவி மேசையில் இருந்த தண்ணீர்ப் போத்தலில் அரைவாசியைக் குடித்துவிட்டார்" என்றுதான் எழுதுவோம். யாரும் "தண்ணீர்ப் போத்தலில் அரைவாசியை தனபாலசிங்கம் குடிப்பதற்காக ஊர்க்குருவி வைத்தார்" என்று எழுதுவதில்லையே.

இப்படித்தான் எழுதவேண்டும் என்றும் இன்றைய ஊடகவியலாளர்கள் பலருக்கு சொல்லிக் கொடுத்தவரும் நீங்கள்தானே என்று தனபாலசிங்கம் அண்ணரிடம் கேட்காமல் இருக்கமுடியவில்லை.!

ஊர்க்குருவி.

# ஜப்பான் அரசாங்கத்திடம் இருந்து புலமைப் பரிசில்!

கொழும்பு, மே. 24

ஜப்பான் அரசாங்கத்தினால் மனித வள அபிவிருத்தி புலமைப் பரிசிலுக்கான ஜப்பான் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதுமானிப் பட்டம் மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்பை பயில்வதற்காக எமது நாட்டின் அரச துறையின் நிறைவேற்று மட்டத்திலான அலுவலர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

2010ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூன்று பணிமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2022ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நான்காவது பணிமுறை 2025ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை 225 பட்டப் படிப்பிற்கான மற்றும் 17 கலாநிதிப் பட்டப்படிப்புக்கான வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் நான்காவது படிமுறையின் கீழ் மூன்றாவது குழுவினருக்கு நிதியுதவியை வழங்க ஜப்பான் அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய குறித்த நிதியுதவியை பெற்றுக் கொள்வதற்காக ஜப்பான் அரசாங்கத்துடன் உரிய பரிமாற்றுக் கடிதங்களில் கையொப்பமிடுவதற்கும், அது தொடர்பான ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்!

வடமராட்சி, மே 24

உலக சுற்றாடல் தினம் எதிர்வரும் ஜூன் 5ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதையொட்டி, யாழ். மாவட்ட பாடசாலைகளின் மாணவர்களிடையே சுற்றாடல்சார் விழிப்புணர்வு போட்டி நடைபெறவுள்ளது.

"நில மறுசீரமைப்பும் பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியாகும் தன்மை" என்ற தலைப்பில் சுவரொட்டி தயாரித்தல், பொது அறிவு, நாடக போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. பங்கேற்க விரும்பும் மாணவர்களின் பெயர் விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் அறிவித்துள்ளார். (ஐ)

# ஜெனரேட்டரை இயக்கிவிட்டு தூங்கிய தந்தையும் மகனும் பரிதாப உயிரிழப்பு

கொழும்பு, மே. 24

ஜெனரேட்டரை இயக்கிவிட்டு தூங்கச் சென்ற தந்தையும் மகனும் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக புபுரஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

புபுரஸ்ஸ நெஸ்டா காலனியை சேர்ந்த, 40 வயதுடைய சனத் ரோஹன மற்றும் 17 வயதுடைய ககன மதுசங்க ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு புபுரஸ்ஸ நகரில் நேற்று வியாழக்கிழமை அன்று உணவு வழங்கும் நிகழ்வு நடத்துவதற்கு ஆயத்தமாகியிருந்ததால் , அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் தனது அறையில் ஜெனரேட்டர் இயந்திரத்தை இயக்க வைத்து குறித்த தந்தையும், மகனும் உறங்கச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் புபுரஸ்ஸ காவற்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டபோது, ஜெனரேட்டரில் இருந்து வந்த கார்பன் மோனாக்சைட் வாயுவை சுவாசித்ததால் இருவரும் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புபுரஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 14 வயது சிறுமி துஷ்பிரயோகம்

கிளிநொச்சி, மே. 24

கிளிநொச்சியில் 14 வயது சிறுமியொருவர் அக்காவின் காதலனால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் 118 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து கிளிநொச்சி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே மேற்படி விடயம் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமி அவளது அக்காவின் காதலனால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பரிசோதனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்த போதும் குறித்த நபர் தலைமறைவாகியுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

# மீனவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, மே. 24

கற்பிட்டி முதல் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற் பிராந்தியங்களில் கடல் கொந்தளிப்பாக காணப்படும்.

இதனால் கடற்றொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரை குறித்த கடற் பிராந்தியங்களுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நிலவும் மழையுடனான காலநிலையை அடுத்து ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி களனி கங்கை, களு கங்கை, கிங் கங்கை மற்றும் நில்வளகங்கை ஆகியவற்றின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஆறுகளை அண்டியுள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

Eelanadu

24.05.2024 வெள்ளிக்கிழமை

குரோதி வருடம், வைகாசி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஈழத்தமிழர் ஒரு பலவீனமான இனமா?

75 வருடங்களாகத் தொடரும் அரசியல் பயணம். முப்பது வருடங்களுக்கு மேலான ஜனநாயக அரசியல் போராட்டம் - இன்னொரு முப்பது வருடங்களுக்கும் மேலாக ஆயுத விடுதலைப் போராட்டம். விடுதலைப் புலிகள் தலைமையிலான ஆயுதப் போராட்டமானது இந்து சமுத்திர பிராந்திய அரசியல் சமநிலையில் தாக்கம் செலுத்தும் ஒன்றாக இருந்தது. இந்தக் காலகட்டத்தில் இரண்டு வெளிநாட்டு தலையீடுகளை தமிழர் அரசியல் எதிர்கொண்டிருந்தது. 1987இல் இந்திய தலையீடு, 2002இல் நோர்வே ஊடான மேற்குலக தலையீடு. இறுதியில் ஈழத் தமிழர்கள் எதனையும் அடையவில்லை. இதற்கு மற்றவர்கள்மீது குற்றம் சாட்டுவதானது மிகவும் இலகுவான விடயம். எங்களை நாங்களே நிறுத்துப் பார்ப்பதுதான் சரியானது. இந்தியாவின் தலையீடு ஈழத் தமிழர் அரசியலுக்கு பிராந்திய முகத்தை வழங்கியது. மேற்குலகத் தலையீடு தமிழர் அரசியலுக்கு உலகளாவிய முகத்தை வழங்கியது.

ஒப்பீட்டடிப்படையில், எவ்வாறான விமர்சனங்கள் இருந்தபோதிலும்கூட விடுதலைப் புலிகளின் காலத்தில் ஈழத் தமிழர் அரசியல் முற்றிலுமாக ஈழத் தமிழரின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால், இப்போது அப்படியில்லை. ஈழத் தமிழரின் அரசியலை தீர்மானிப்பவர்களாக வேறு எவரெல்லாமோ இருக்கின்றனர். யுத்தத்துக்குப் பின்னரான ஈழஅரசியலின் நிலை இதுதான். இதனை எவ்வாறு மாற்றுவது? கடந்த பதினைந்து வருடகாலமாக தமிழ்த் தேசிய அரசியலுக்கு தலைமை தாங்கியதாக நம்பப்படும் எந்தவொரு கட்சியாலும் - அந்தக் கட்சியின் எந்தவொரு நபராலும் ஈழத் தமிழர் அரசியலை தனித்துவமான ஒன்றாக நிலைநிறுத்த முடியவில்லை.

சம்பந்தன் மேற்கொண்ட அரசியல் அணுகுமுறை என்பது தென்னிலங்கையிடம் சரணாகதி அடையும் அரசியல்தான். இந்தியாவை நோக்கிச் சென்றால் சிங்களவர்கள் கோபிப்பார்கள் என்று சிந்திக்குமளவுக்கே சம்பந்தனின் அரசியல் புரிதலும் - செயல்பாடும் இருந்தன. தென்னிலங்கையிலுள்ள சிங்கள ஆளும் வர்க்கம் சிறியளவில்கூட பதற்றமடைந்துவிடக்கூடாது. அவ்வாறு பதற்றமடையச் செய்யும் எதனையும் தமிழர்கள் செய்துவிடக்கூடாது என்பதே சம்பந்தனின் நிலைப்பாடாக இருந்தது.

இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் மக்கள் ஒரு பலவீனமான சிறுபான்மை இனம். அவர்களால் தனித்துவமாக எதனையும் செய்ய முடியாது. கடந்த பதினைந்து வருடகால சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் - தமிழ் அரசு கட்சியின் அரசியல் அணுகுமுறை இந்த அடிப்படையைக் கொண்டதுதான். பிரதமர் மோடியை சந்திப்பதைத் திட்டமிட்டு சம்பந்தன் தவிர்த்தமை - பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதும் ரெலோவின் முயற்சியை கண்டு பதற்றமடைந்தமை. இப்போது தமிழ் பொது வேட்பாளரை பார்த்து பதற்றமடைவது - அனைத்துமே ஒரு நேர்கோட்டில் சந்திக்கும் விடயங்கள்தான். அதாவது, தமிழ் மக்கள் ஒரு பலவீனமான இனம் - அவர்களுக்கென்று தனித்துவமான அரசியல் செயல்பாடுகள் இருக்கக்கூடாது.

உண்மையில், ஈழத் தமிழினத்தை ஒரு பலவீனமான இனமாக பேணிப் பாதுகாப்பதற்கான வேலையைத்தான் கடந்த பதினைந்து வருடங்களாக சம்பந்தனும் அவரின் சீடர்களும் முன்னெடுத்து வந்தனர். அதற்கு சவால் விடுக்கக்கூடிய எந்தவொரு தனித்துவமான அரசியல் நகர்வுகளையும் எந்தக் காரணம் கொண்டும் அனுமதித்துவிடக்கூடாது என்பதில், சம்பந்தனும் அவரின் அணுகுமுறையை பின்தொடர்பவர்களும் மிகவும் கவனமாக இருக்கின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் பரிந்துரை ஏன் நிராகரிக்கப்படுகின்றது - ஏன் அதைக் கண்டு அஞ்சுகின்றனர் - ஏன் அது வன்மையாக எதிர்க்கப்படுகின்றது? -என்னும் அனைத்துக் கேள்விகளுக்குமான பதில் ஒன்றுதான். அதாவது, தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டு அவருக்கு தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்துவிட்டால் இலங்கைத் தீவில் ஈழத் தமிழினம் ஒரு பலவீனமான இனம் அல்ல. அவர்கள் இப்போதும் தங்களின் உரிமை - தங்களுக்கான நீதி தொடர்பில் உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் இருக்கின்றனர் என்பது உறுதியாகிவிடும். அது நிகழ்ந்தால் தமிழ் மக்கள் மத்தியில் புதியதோர் அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டுவிடும். அதனை நடக்க அனுமதிக்கக்கூடாது என்பதில் ஓரணியாக நிற்பவர்கள் அனைவருமே தமிழ் பொது வேட்பாளரை வன்மையாக எதிர்கின்றனர். தமிழ் மக்கள் ஒரு பலவீனமான இனம் இல்லை - இந்தப் பிராந்தியத்தில் எட்டுக் கோடி மக்களுடன் மொழியால் கலாசாரத்தால் ஒன்றுபடக்கூடிய ஒரு மக்கள் கூட்டம். அப்படியான ஒரு மக்கள் கூட்டத்தால் ஒரு தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க முடியாதா? திரண்டு வாக்களிக்க முடியாதா?

## பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்கு இலஞ்சம் கோரிய அதிபர்

கொழும்பு, மே. 24

பாடசாலை அதிபர் ஒருவர் சத்துணவு திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு நாளாந்தம் உணவை வழங்க, பெண்ணொருவரிடம் லஞ்சம் கோரியதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதனையடுத்து, குறித்த அதிபரை இலஞ்ச, ஊழல் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

தெஹியோவிட்ட கல்வி வலயத்திற்குட்பட்ட எஹலியகொட பெருந்தோட்ட பாடசாலை ஒன்றின் அதிபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஹலியகொட பெருந்தோட்டத்தில் வசிக்கும் பெண்ணொருவர், குறித்த பாடசாலைக்கான சத்துணவை தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளார்.

இந்த நிலையில், பாடசாலை மாணவர்களுக்கு தொடர்ச்சியாக உணவை வழங்க வேண்டும் என்றால், மாதாந்தம் 50,000 ரூபாவை தனக்கு வழங்குமாறு, பாடசாலை அதிபர் குறித்த பெண்ணிடம் கோரியுள்ளார்.

இதன்படி, அதிபருக்கு கடந்த 05ஆம் திகதி, குறித்த பெண் 20,000 ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்த நிலையில், எஞ்சிய 30,000 ரூபாவை பெற்றுக் கொள்ள முற்பட்ட போதே, குறித்த அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை அவிசாவளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த இலஞ்ச, ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## வெளிநாடுகளிலிருந்து மரக்கறி இறக்குமதி செய்யப்படவில்லை

கொழும்பு, மே. 24

வெளிநாடுகளிலிருந்து மரக்கறி வகைகள் இறக்குமதி செய்யப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டில் உண்மையில்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் ெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

மரவள்ளி, வத்தாளி உள்ளிட்ட கிழங்கு வகைகளையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாக சில தரப்பினர் குற்றம் சுமத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாக மரக்கறி வகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாக அமைச்சர் கூறினார்.

எனினும் உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பன மட்டும் இறக்குமதி செய்யப்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (அ)

## காட்டு யானையால் அச்சத்தில் மக்கள்!

மன்னார், மே. 24

மன்னார் முருங்கன் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இரண்டாவது நாளாகவும் தனித்து திரிகின்ற காட்டு யானையை அங்கிருந்து வெளியேற்ற அரச அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன் வரவேண்டும் என அருட்தந்தை டெஸ்மன் அஞ்சலோ அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் முருங்கன் பகுதியில் நேற்றுக் காலை இரண்டாவது நாளாகவும் தனித்து காட்டு யானை ஒன்று நடமாடியது.

இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் காலையும் குறித்த யானை குறித்த பிரதேசத்தில் சுற்றித் திரிந்துள்ளது.

மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் குறித்த யானையை காட்டுக்குள் துரத்தி உள்ளனர்.


குறித்த யானையை உடனடியாக பிடித்து பிறிதோர் இடத்திற்கு கொண்டு செல்ல அதிகாரிகள் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறித்த பிரதேசத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலை யானையினால் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச செயலாளரும் மக்களின் நலனை கருத்தில் கொண்டு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

குறித்த விடயம் தொடர்பாக உடனடியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு குறித்த சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தினோம்.

உடனடியாக தீர்வை பெற்றுக் கொள்ளும் வகையில் எதிர்வரும் வியாழக் கிழமை அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார் - என்றார்.(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் எதிர்பார்ப்புகள் தாமதமாக முடியும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**இடபம்**

பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**

பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. உறவினர்கள், உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. அமைதியான நாள்.

**கடகம்**

வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**

பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**

திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**துலாம்**

கணவன் மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் உயரதிகாரியின் ஆதரவு கிடைக்கும். உற்சாகமான நாள்.

**விருட்சிகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக்கொண்டே இருக்கும். வளைந்து கொடுத்துப் போவது நல்லது. இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**

சில காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். போராடி வெல்லும் நாள்.

**மகரம்**

சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். புகழ் ஓங்கும் நாள்.

**கும்பம்**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள், நண்பர்கள் உங்கள் உதவியை நாடுவார்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மீனம்**

இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படுவீர்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் உயரதிகாரி ஆதரிப்பார். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

# தங்கள் தலைவர்களைவிட இலங்கை மக்கள் மோடியையே நம்புகிறார்கள்!

## பா. ஜ. கவின் தமிழ்நாடு பொது செயலர்

ராமேஸ்வரம், மே 24

இலங்கை மக்களுக்கு அவர்களின் ஜனாதிபதி, பிரதமரைக் காட்டிலும், இந்தியப் பிரதமர் மோடி மீது பெரிய நம்பிக்கையும், மரியாதையும் உள்ளது என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் ராம. சீனிவாசன் கூறியுள்ளார்.

நுவரெலியா - சீதாஎலியவில் சீதை அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தில் பங்கேற்று தமிழ்நாடு சென்ற பின்னர் அளித்த நேர்காணல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அயோத்தியில் இராமர் கோயில் திறந்த பிறகு, இலங்கை சீதை அம்மன் கோயிலுக்கு பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளது.

மலையகத்தில் தேயிலை தோட்ட பகுதிகளில் வசிக்கும் தமிழர்களின் குழந்தைகளுக்கு போதுமான கல்வி வசதி இல்லை. பல இடங்களில் ஆரம்ப பாடசாலைகள்கூட இல்லை. எனவே, பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

இலங்கையில் வளர்ச்சி மற்றும் முதலீடுகள் கொழும்பு, கண்டி, நுவரெலியா ஆகிய 3 மாவட்டங்களில் மட்டுமே உள்ளன. மற்ற மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி இல்லை.

தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலை உள்ளது. பெரும்பான்மையானவை உள்நாட்டுப் போரின் போது அழிந்துவிட்டன. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அதிக அளவில் தொழில் முதலீடுகள் செய்ய வேண்டும்.

தலைமன்னாருக்கும், தனுஷ்கோடிக்கும் இடையே பாலம் அமைக்கும் பணியை விரைவுபடுத்த வேண்டும். இந்தப் பாலத்தின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மட்டுமின்றி, ஒட்டுமொத்த இலங்கைக்கும் மறுவாழ்வு கிடைக்கும்.

கடந்த 10 ஆண்டுகளில் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு இலங்கை மக்களுக்கு பல்வேறு பணிகளை செய்துள்ளது. இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் போது இந்திய அரசு பல்வேறு உதவிகளை செய்தது. இலங்கை மக்களுக்கு அவர்களின் ஜனாதிபதி பிரதம்ர்களைக் காட்டிலும், இந்தியப் பிரதமர் மோடி மீது பெரிய நம்பிக்கையும், மரியாதையும் உள்ளது - என்றார். (ஐ)

# 3 ஆண்டுகால ஆட்சியில் முதல்வர் சாதிக்கவில்லை

## பாட்டாளி மக்கள் கட்சி சாடல்

விழுப்புரம், மே 24

"முதல்வர் ஸ்டாலின் கடந்த 3 ஆண்டுகளில் எவ்வித சாதனையும் செய்யவில்லை. மீதமுள்ள ஆண்டுகளில் சாதனை படைத்து முத்திரை பதிக்கவேண்டும்." என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழக முதல்வர்கள் ஒவ்வொருவரும் சாதனை படைத்து வரலாற்றில் இடம் பிடித்தனர். ராஜாஜி சென்னை மாகாணத்தில் மது விலக்கை அறிமுகம் செய்தார். அதனை ஓமந்தூரார் சென்னை மாகாணம் முழுவதும் விரிவுபடுத்தினார். காமராஜர் பாசன திட்டங்களையும், அண்ணா மும்மொழி திட்டத்தை இரத்து செய்து, சென்னை மாகாணத்தை தமிழ்நாடு என பெயர் மாற்றினார். கலைஞர் 3 வகையான இட ஒதுக்கீட்டையும், எம். ஜி. ஆர் சத்துணவு திட்டத்தையும், ஜெயலலிதா தொட்டில் குழந்தை திட்டத்தையும், 69 சதவீத இட ஒதுக்கீட்டை 9ஆவது அட்டவணையில் கொண்டுவந்தார். முதல்வர் ஸ்டாலின் கடந்த 3 ஆண்டுகளில் எவ்வித சாதனையும் செய்யவில்லை. மீதமுள்ள ஆண்டுகளில் சாதனை படைத்து முத்திரை பதிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# உருவானது ரீமால் புயல்

சென்னை, மே 24

வங்கக் கடலில் ரீமால் புயல் மையம் கொண்டுள்ளது. இது நாளை மறுநாள் மேற்கு வங்கத்தை கடக்கும். இதனால், தமிழ்நாட்டில் வெப்பம் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது பரவலாக மழை பெய்து வருகின்றது. இதனிடையே, வட தமிழக - தெற்கு ஆந்திர கடலோர பகுதியை ஒட்டி தென்மேற்கு வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு உருவாகியுள்ளது. இதனால், புதுச்சேரி, காரைக்காலில் 28ஆம் திகதி வரை கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது.

இந்த காற்றழுத்தத் தாழ்வு இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும். இது மேலும் வலுவடைந்து புயலாக நாளைய தினம் புயலாக மாறலாம். இந்த புயலுக்கு ஓமன் நாட்டின் பரிந்துரைப்படி "ரீமால்" என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த புயல் நாளை மறுநாள் மாலை மேற்குவங்காளத்துக்கு அருகே கரையை கடக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. புயல் வடக்குப்பகுதியில் நகரும்போது தமிழகத்தில் மழை குறைந்து வெப்பம் அதிகரிக்கக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ஐ)

# அயோத்தியில் சீதைக்கு கோயில்

## காங்கிரஸ் கட்சி

சென்னை, மே 24

கோவிலை இடிக்கும் எண்ணம் காங்கிரசுக்கு இல்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அயோத்தியில் சீதை மற்றும் அனுமனுக்கு கோவில் கட்டுவோம் என்று காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு முன்னாள் தலைவர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் கூறினார்.

நான் சாதாரணமாக எல்லா மனிதர்களைப் போல பிறக்கவில்லை. இயற்கை முறைப்படி நான் பிறக்கவில்லை. நேரடியாக கடவுள் மூலமாக பிறந்தேன் என்று பிரதமர் மோடி சொல்கின்றார். தேர்தல் முடியும் தறுவாயில் ஆட்சியும் முடிந்துவிடும் என்பதை உணர்ந்து ஏதேதோ பேசுகிறார். தரமற்ற நிலக்கரியை தமிழ்நாட்டுக்கு கொடுத்து 6 ஆயிரம் கோடி ஊழல் மோடி செய்துள்ளார்.

காங்கிரஸ் லஞ்சம் பெறுகிறது என்று கூறிவந்த மோடி தற்போது லஞ்ச மோசடியில் சிக்கி உள்ளார். தமிழர்களை மோடி திருடர்கள் என்று சொல்லியிருக்கிறார்.

பிரதமர் மோடி தப்பி தவறி சென்னை வந்தால் வேட்டி கட்டிக்கொண்டு வரக்கூடாது. தமிழர்கள் ஒடிசா மாநிலத்தை ஆளக் கூடாது என்றால் பாகிஸ்தானில் பிறந்த அத்வானியை ஏன் இந்தியாவில் துணை பிரதமராக்கினார்கள் - என்றும் கூறினார்.

# கேரள அரசின் அணைகட்டும் முயற்சியை நிறுத்தவேண்டும்

## தினகரன் வலியுறுத்து

சென்னை, மே 24

முல்லை பெரியாற்றில் புதிய அணை கட்டும் கேரளாவின் முயற்சியை தமிழக அரசு தடுக்க வேண்டும் என்று அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் (அ. ம. மு. க.) பொதுச்செயலாளர் டி. டி. வி. தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

"புதிய அணையை கட்டி தென் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் கேரள அரசின் முயற்சியை ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்த வேண்டும்.

கூட்டணி தர்மத்தை விட மக்களின் நலனும், மாநில உரிமையையுமே முக்கியம் என்பதை உணர்ந்து, கேரள அரசின் புதிய அணை கட்டும் முயற்சியை ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்தி தென் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தோடு மாநில உரிமையையும் நிலைநாட்ட வேண்டும் என முதலமைச்சர் மு. க. ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்"- என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல வைத்தியசாலைகளிலும் 28 ஆம் திகதி வேலைநிறுத்தம்!

## சுகாதார தொழிற்சங்கள் அறிவிப்பு

கொழும்பு, மே. 24

**நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் எதிர்வரும் 28 ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

உத்தியோகபூர்வ சீருடை கொடுப்பனவுக்கு இணையாக ஏனையவற்றுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படவில்லை எனவும் விசேட கொடுப்பனவை அதிகரிப்பதற்கான சுற்றறிக்கை, 15 பிரிவினரை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம, எதிர்வரும் 28 ஆம் திகதி நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதேவேளை, தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார துறையின் 72 தொழிற்சங்கங்கள் கடந்த நாட்களில் மாகாண மட்டத்தில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்திருந்தன.

பொருளாதார நீதியை வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சு தீர்வை வழங்குவதாகக் கூறியபோதிலும், அதனை நிறைவேற்றாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்வு!

கொழும்பு, மே. 24

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையை நாட்டின் மூன்றாவது தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் அபிவிருத்தியடைந்த தேசிய வைத்தியசாலைகளாக கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகள் மட்டுமே உள்ளன.

இதன்படி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும் சுகாதார நிலையத்தில் வைத்தியர்கள், தாதியர்கள் போன்றவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கராப்பிட்டிய வைத்தியசாலை அதிகளவு பங்களிப்புச் செய்வதாகவும் தெரிவித்த அமைச்சர், ருஹுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பயிற்சி வைத்தியசாலையாக வருடாந்தம் 1000 இற்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் பயிற்சி பெறுவதாகவும் குறிப்பிட்டார். (அ)

# இந்தியாவில் கைதாகிய இலங்கையர்கள் விசாரணைக்காக விசேட குழு நியமனம்

கொழும்பு, மே. 24

இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என கூறப்படும் இலங்கையர்கள் நால்வர் குறித்த விசாரணைகளுக்காக பொலிஸ்மா அதிபர் விசேட குழுவொன்றை நியமித்துள்ளார்.

இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில் குஜராத் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் சென்னையில் இருந்து வருகை தந்த நான்கு பயணிகள் கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு, பெரியமுல்லை பகுதியை சேர்ந்த 33 வயதான மொஹமட் நுஸ்ரத், கொழும்பு மாளிகாவத்தையை சேர்ந்த 35 வயதான மொஹமட் பாரிஸ், கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியை சேர்ந்த 27 வயதான மொஹமட் நப்ரான், கொழும்பு 13 ஐ சேர்ந்த 43 வயதான மொஹமட் ரஷ்டீன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

குறித்த நால்வருக்கும் பாகிஸ்தானை சேர்ந்த அபு என்ற நபருடன் சமூக வலைத்தளங்கள் மூலம் தொடர்பில் இருப்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.


மேலும், இந்தியாவில் தாக்குதல் நடத்த அபு என்ற குறித்த நபரால் இவர்கள் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளதாக குஜராத் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சந்தேக நபர்கள் நால்வரும் தற்கொலைத் தாக்குதலுக்கு தயாராக இருந்ததாகவும், அதற்காக அபு என்ற நபர் தலா 4 இலட்சம் இலங்கை ரூபாயை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அபு என்ற நபர், கைது செய்யப்பட்டுள்ள குறித்த நான்கு இலங்கையர்களுக்கும் வழங்க தயார் செய்த சில ஆயுதங்களும் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவர்களில், மொஹமட் நப்ரான், நீதிபதி சரத் அம்பேபிட்டியவை கொலை செய்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட, திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளியான நியாஸ் நௌபர் எனும் பொட்டு நௌபரின் மகன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே இலங்கையிலும் அவர்கள் குறித்து விசாரணை செய்வதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோரின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)



# நுவரெலியாவில் கடும் காற்று!

கொழும்பு, மே. 24

நுவரெலியா, கந்தப்பளை பகுதிகளில் வீசிய கடும் காற்றினால் வீடுகள் சில சேதமடைந்துள்ளன. குறித்த அனர்த்தம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

நாட்டில் அதிகமான இடங்களில் கடும் காற்று வீசுவதுடன், மழை பெய்துவருகின்றன.

இந்நிலையில் நுவரெலியாவில் நேற்று வீசிய கடும் காற்றினால் அதிகமான வீடுகளில் கூரையில் பொருத்தப்பட்டிருந்த தகரங்கள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் வீடுகளும் சேதமடைந்துள்ளன.

அத்துடன் நேற்றும் தொடர்ச்சியாக கடும் காற்றுடன் மழை பெய்தது.

நுவரெலியா மற்றும் நானுஓயா பகுதியில் பல பிரதான வீதியோரங்களில் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த பதாதைகளும் பெயர்ப் பலகைகளும் உடைந்து வீழ்ந்து சேதமடைந்துள்ளன.

நுவரெலியா-பதுளை பிரதான வீதியில் நேற்று அதிகாலையில் நுவரெலியா மத்திய பொதுச் சந்தைக்கு அருகில் பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் குறித்த பகுதியினூடான போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலையால் வீதிகளில் மரங்கள் முறிந்து விழுதல் மற்றும் மண் சரிவு அபாயம் ஏற்படுவதனால் வாகனங்களை வாகனச் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செலுத்த வேண்டும் எனவும் தொடர்ந்து மழையுடனான காலநிலை நிலவுவதால் நுவரெலியா மாவட்டத்தில் அதிக பனிமூட்டம் நிறைந்து காணப்படுகிறது. எனவே ஹற்றன்-நுவரெலியா, வெலிமட, கண்டி வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் அவதானத்தோடு வாகன விளக்குகளை ஒளிரவிட்டு வாகனங்களை செலுத்துமாறும் போக்குவரத்து பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்!

கொழும்பு, மே. 24

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகி உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களமும், இந்திய வானிலை ஆய்வு மையமும் உறுதிப்படுத்தியுள்ளன.

தென்கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் அதனையொட்டிய மேற்கு-மத்திய வங்காள விரிகுடா கடற் பிராந்தியத்தில் நேற்று முன் தினம் இரவு தாழமுக்க நிலையொன்று உருவாகியுள்ளது. இது எதிர்வரும் நாட்களில் வடகிழக்குத் திசையில் நகர்ந்து, படிப்படியாக வலுவடைந்து இன்று தாழமுக்கமாக மாறும் சாத்தியம் உள்ளதாகவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த தாழமுக்கம் சூறாவளியாக உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த சூறாவளிக்கு ஓமான் நாட்டினால் பரிந்துரை செய்யப்பட்ட ரேமல் எனும் பெயர் வழங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது எதிர்வரும் 25ஆம் திகதியளவில் வடக்கு ஒரிசா அல்லது மேற்கு வங்கம் பகுதியினூடாக ஊடறுத்துச் செல்லலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# 278 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

கொழும்பு, மே

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு 278 கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் 10 பெண் கைதிகளும் அடங்குகின்றனர்.

ஜனாதிபதியால் இந்த விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு நேற்றும் இன்றும் கைதிகளை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

உறவினர்கள் கொண்டு வரும் உணவு, இனிப்பு பண்டங்கள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் ஒருவருக்கு மாத்திரம் போதுமானளவு கொண்டு வருமாறு உறவினர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (அ)

# கிராம உத்தியோகத்தர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கு அங்கீகாரம்

கொழும்பு, மே. 24

நாட்டில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, இலங்கை கிராம சேவையாளர் சேவையை ஸ்தாபிப்பதற்காக, சேவைப் பிரமாணக் குறிப்பை அரசியலமைப்பு வரைவு அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக கிராம அலுவலரின் அடிப்படைச் சம்பளம் 28,940 ரூபாய் முதல் 30,140 ரூபாயாக உயரும் என்றும் கிராம அலுவலர் சேவையில் தரம் 2 அதிகாரியின் அடிப்படைச் சம்பளம் 33,690 ரூபாவாகவும் தரம் 3 அதிகாரியின் அடிப்படைச் சம்பளம் 38,590 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகு எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தேரவாத பௌத்தத்தில் தீர்வு உண்டு!

## வெசாக் விழாவில் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, மே. 24

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்துடன் வேகமாக முன்னேறும் உலகம் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தேரவாத பௌத்தத்தில் தீர்வு இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை தர்மராஜா பிரிவேனா விகாரையில் நேற்று அரச வெசாக் விழா இடம்பெற்றது. மற்றவர்கள் செய்ததை அன்றி தான் செய்தவற்றைப் பற்றி கவனம் செலுத்துவோம் என்ற தொனிப்பொருளில் இந்த வெசாக் விழா நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று உலகம் மூடநம்பிக்கையிலிருந்து விலகிச் செல்கிறது. அறிவியலில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பத்தால், பல நூற்றாண்டுகளாக நமது வாழ்க்கை முறை முற்றிலும் மாறி வருகிறது.

மருத்துவத் துறையும் தொழில்நுட்பத் துறையும் வளர்ச்சியடைந்துள்ளன.

அதேநேரம், வானவியல் பற்றிய புதிய அறிவு மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் பெறப்பட்ட அறிவின் வளர்ச்சியுடன், நாம் இன்னும் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் தேரவாத பௌத்தத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் அதன் உண்மையான அர்த்தத்தை அறிந்தவர்களுக்கும் இது ஒரு பிரச்னையல்ல. தேரவாத பௌத்தத்தின் ஊடாக இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க முடியும் -என்றார். (அ)

# இலங்கைக்கு 76 ஆவது இடம்

கொழும்பு, மே. 24

உலக பொருளாதார பேரவை 'பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டு குறியீடு 2024' என்ற தலைப்பில் உலக நாடுகளின் சுற்றுலா செயல்பாடுகளை தரவரிசைபடுத்தியுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கை 76 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

குறிப்பாக, இலங்கை சுற்றுலா சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு, கலாச்சார வளங்கள் மற்றும் பொழுதுபோக்கு அல்லாத செயற்பாடுகள் பிரிவுகளில் மோசமான மதிப்பெண் பெற்றுள்ளது, அதே நேரத்தில் போட்டித்தன்மை மிக்க விலை மற்றும் பயணம், சுற்றுலா சமூக பொருளாதார தாக்கம் ஆகிய வற்றில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளது.

இந்நிலையில், இந்தப் பட்டியலில் 2021 ஆம் ஆண்டு 74ஆவது இடத்தில் இருந்த இலங்கை, தற்போது 119 நாடுகளில் தரவரிசையில் 76 ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. 2019 ஆம் ஆண்டு இலங்கை 77 ஆவது இடத்தை பிடித்திருந்தது.

இதேவேளை, இலங்கையின் போட்டியாளர்களான வியட்நாம் (59ஆவது), தாய்லாந்து (47ஆவது), இந்தோனேசியா (22ஆவது) மற்றும் மலேசியா (35ஆவது) ஆகியவை சுட்டெண்ணில் இலங்கைக்கு மேலே தர வரிசையில் உள்ளன. மேலும், தெற்காசியாவில் இந்தியா (39ஆவது) முதலிடத்திலும், இலங்கை இரண்டாவது இடத்திலும் உள்ளது.

இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து ஸ்பெயின், ஜப்பான், பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளன. (அ)

# மாங்குளம் வைத்தியசாலையின் பெயர்ப்பலகையில் எழுத்து பிழை!




முல்லைத்தீவு, மே. 24

வடக்கு மாகாணத்தில் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் மருத்துவப் புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் உளநல மேம்பாட்டு நிலையம் மாங்குளம் ஆதார வைத்தியசாலை வளாகத்தை அண்டிய பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிலையில், வைத்தியசாலை முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் பெயர்ப் பலகையில் மாங்குளம் என்பது தமிழ் மொழியில் தவறாக எழுதப்பட்டுள்ளது.

இதனை மாற்றுமாறு பல தடவைகள் உரியவர்களுக்கு தெரியப்படுத்தியும் இன்றுவரை அது மாற்றப்படவில்லை. எனவே, திறப்பு விழாக்கு முன்னதாக தமிழ் மொழியைச் சரி செய்து பெயர்ப் பலகையினை மாற்றித் திறப்பு விழாவினை செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட பொதியில் ஹெரோயின்!

## மூவர் சி.ரி.டியினரால் கைது

யாழ்ப்பாணம், மே. 24

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதி ஒன்றினுள் போதைப் பொருளை மிக சூட்சுமமாக அனுப்பி வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு தனியார் நிறுவனம் ஒன்றின் பொதி சேவைகள் ஊடாக, சேலை உள்ளிட்ட ஆடைகள் அடங்கிய பொதி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பொதியினுள் சூட்சுமமான முறையில் ஹெரோயின் போதைப்பொருளையும் மறைத்து வைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பொதியினை பெற்றுக்கொண்டவர் மற்றும் அதற்கான பணத்தை வழங்கிய பெண் உள்ளிட்ட இருவரை கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் மீட்டு இருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், பொதியினை அனுப்பி வைத்த நபரை கொழும்பில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் நேற்று முன் தினம் புதன்கிழமை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி, பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதி பெற்று, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# புதையல் தோண்டிய எட்டு பேர் கைது!

கொழும்பு, மே. 24

மஹியங்கனை சொரபொர பகுதியில் புதையல் தோண்டிய 08 பேரை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மற்றும் பூசைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்த சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் மஹியங்கனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 50, 45, 37, 38 மற்றும் 42 வயதுடையவர்கள் எனவும் அவர்களில் நால்வர் மஹியங்கனை பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் ஏனையவர்கள் கொட்டாவ, காலி, நெலுவ மற்றும் எம்பிலிபிட்டிய பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் கூறினர்.

# போதைப்பொருள் மறைத்து எடுத்துச் சென்றவர் கைது!

கொழும்பு, மே. 24

போதைப்பொருளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நண்பருக்கு உணவுப் பொதியில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களை மறைத்து எடுத்துச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம் ஜயசிறிபுர பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய வராவார்.

கைது செய்யப்பட்டவர் போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# சல்லி கடற்பரப்பில் 2 மீனவர்கள் மாயம்

திருமலை, மே. 24

திருகோணமலை மாவட்டத்தின் சல்லி கடல் பகுதியில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரை காணவில்லை என மீனவர்களின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை 20ஆம் திகதி சல்லி பிரதேசத்தில் இருந்து முற்பகல் 10 மணியளவில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் கடல் நடுவே காணாமற்போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

வட்டாரம் 2 சல்லி பிரதேசத்தைச் சேர்ந்த குட்டிராசா சசிக்குமார் (வயது 45), முருகையா சுஜந்தன் (வயது 22) ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

காணாமற்போன மீனவர்களை தேடி சல்லி பிரதேசத்தைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் சென்றுள்ள நிலையில், இது தொடர்பில் கடற்படைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக மீனவர்களின் உறவினர்கள் கூறினர். (அ)

# யாழில் கடற்தொழிலுக்கு சென்றவர் கடலில் தவறி விழுந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே. 24

யாழ்ப்பாணத்தில் கடற்தொழிலுக்குச் சென்ற தொழிலாளி ஒருவர் நேற்று முன் தினம் புதன்கிழமை கடலில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 58 வயதுடைய அந்தோணிப்பிள்ளை றோமான் மெய்ன்ரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கட்டுமரமொன்றில் மீன் பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றவேளை, கட்டுமரத்தில் இருந்து தவறி கடலினுள் விழுந்து உயிரிழந்துள்ளார். சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் ஒத்துழைப்பின்றி நாட்டை கட்டியெழுப்ப முடியாது!

## அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 24

**சர்வதேசத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் நாட்டை ஒரு போதும் முன்னேற்ற முடியாது. அதனால் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு சர்வதேச ரீதியில் கடனுதவிகளை பெற்றுக் கொள்ள நேரும் என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றவர்களால் நாட்டைப் பாதுகாக்க முடியாது.என தெரிவித்து எதிர்க் கட்சியின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல மாற்று வேலைத் திட்டம் ஒன்றைச் சபையில் முன் வைத்தார். புதிய அரசாங்கத்துக்கு அதனை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். இது முற்றிலும் தவறான எண்ணம்.

2001 ஆம் ஆண்டிலிருந்தே நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளது.

அந்த சந்தர்ப்பத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சுதந்திரத்திற்குப் பின்னர் 1. 4 ஆக காணப்பட்டது. அப்போது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமைக்கு சமமான நிலை நாட்டில் உருவாகியது. வட்டி வீதம் அதிகரித்தது. அந்நிய செலாவணி வீதம் கட்டுப்படுத்த முடியாமல் போனது.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கீழ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அமைக்கப்பட்டது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் உருவாக்கப்பட்டு அந்த வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை பாதுகாப்பதற்கு சட்ட ரீதியான நியதிகள் உள்ளடக்கப்பட்ட சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அது 2003 மூன்றாம் இலக்க அரச முகாமைத்துவ பொறுப்பு சட்டமாகும். அதன் பின்னர் எவர் ஆட்சிக்கு வந்தாலும் சட்டரீதியாக தேவையை நிறைவேற்றி நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப தற்போது ரணில் விக்கிரமசிங்கவாலேயே முடிந்துள்ளது.

எனவே நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு சர்வதேச ரீதியில் கடனுதவிகளை பெற்றுக் கொள்ள நேரும். சர்வதேசத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

அத்துடன் தற்போதைய அரசாங்கம் பயணிக்கும் பாதையிலிருந்து மாறி வேறு மாற்று வழிக்கு சென்றால் நாட்டுக்கு ஏற்படும் அழிவுக்கு தனியாகவோ அல்லது ஒருமித்தோ தற்போதைய அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டிய நிலை ஏற்படும்-என்றார். (அ)

# காசா சிறுவர்கள் நிதியத்திற்கு 40 மில்லியன் ரூபா நன்கொடை

கொழும்பு, மே. 24

பேருவளை, சீனங்கோட்டை பள்ளிவாசல் சங்கம், சீனங் கோட்டை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் சங்கம், "ஜெம் ஸ்ரீலங்கா" சங்கம் மற்றும் சீனங்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவர்களின் பங்களிப்புடன் காசா சிறுவர் நிதியத்திற்கு ரூ. 40,198,902 நன்கொடையாக வழங்கப்பட்டது.

இதற்கான காசோலை நேற்று முன் தினம் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சீனங்கோட்டை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பலீலினால் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் பேருவளை பிரதேச வர்த்தகர்களும் கலந்துகொண்டனர். (அ)

# வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையரை அழைத்துவர ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

கொழும்பு, மே. 24

மியன்மார் பயங்கரவாதப் பிடியிலும், ரஷ்யப் போரின் மத்தியில் இருக்கும் இலங்கையர்களை அழைத்து வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி இராஜதந்திர ரீதியான முன்னெடுப்பில் ஈடுபட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் மட்ட வேலை வாய்ப்புகள் வழங்குவதான வாக்குறுதிகளுடன் ஏமாற்றப்பட்டு, மியன்மாருக்கு அழைத்து வரப்பட்டதன் பிற்பாடு, மியன்மாரில் பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியுள்ள இளைஞர்கள் மற்றும் அதிக சம்பளம் தருவதாக ஏமாற்றப்பட்டு, ரஷ்யாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு ரஷ்ய-உக்ரைன் போரின் முன்னிலை வரிசையில் கட்டாயப்படுத்தப்பட்டு தள்ளப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்டு, அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் வழிகாட்டுதலின்பேரில் ஐக்கிய மக்கள் சக்தியின் மூன்று பிரதிநிதிகளை அந்நாடுகளுக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜே.சி. அலவத்துவல, கே.சுஜித் சஞ்சய பெரேரா மற்றும் வசந்த யாப்பா பண்டார ஆகியோர் மியன்மார் மற்றும் ரஷ்யாவிற்கு புறப்பட்டுச் சென்று, எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி, அந்த இலங்கையர்களுக்காக மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவுள்ளது.

(அ)

# இந்துக்களை படுகொலை செய்வதற்கே 4 இலங்கையர் இந்தியா சென்றுள்ளனர்!

## சபையில் கூறினார் சரத் வீரசேகர

கொழும்பு, மே. 24

பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களையும், இந்துக்களையும் படுகொலை செய்வதற்காக நான்கு இலங்கையர்கள் கடந்த 18 ஆம் திகதி இந்தியாவுக்கு சென்றுள்ளார்கள். குறுகிய காலத்தில் இவர்கள் ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பின் கொள்கையால் ஈர்க்கப்பட்டுள்ளனர். இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும்.

இல்லையேல் இலங்கையிலும் எதிர்காலத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை போன்ற அடிப்படைத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் அச்சமின்றி, சுதந்திரமாக வாழ வேண்டுமாயின் அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியை கண்டுப்பிடிக்கவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுகிறார்கள். குண்டுத்தாக்குதல் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் நிறைவுப் பெற்றுள்ளன. நீதிமன்றத்துக்கும் அறிக்கை செய்யப்பட்டுள்ளன.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பிரதான சூத்திரதாரியை கண்டுப்பிடிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் ஒருபுறம் குறிப்பிட்டுக் கொண்டு மறுபுறம் புலனாய்வுப் பிரிவினரை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். குண்டுத்தாக்குதல் தொடர்பில் சகல தகவல்கள் கிடைத்திருந்தும் எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. சிறுபான்மையினரின் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளை இழக்கக்கூடாது என்பதற்காக பயங்கரவாதி சஹ்ரானின் அடிப்படைவாதச் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை.

குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர் பயங்கரவாதி சஹ்ரானின் தரப்பினர் கிழக்கு மாகாணத்தில் 10 அடிப்படைவாத செயற்பாடுகளிலும், குண்டுத்தாக்குதல் ஒத்திகைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். ஒத்திகையின் போது காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சஹ்ரானின் சகாக்களை பார்வையிடுவதற்கு ஒரு சில அரசியல்வாதிகள் வைத்தியசாலைக்கும் சென்றிருந்தார்கள்.

இதன்போது எழுந்து கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை சேர்ந்த நான்கு இலங்கையர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.இந்தியாவில் தாக்குதல்களை நடத்த இவர்கள் அங்கு சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. ஆகவே அடிப்படைவாதச் செயற்பாடுகள் குறித்து மீண்டும் அச்சம் எழுந்துள்ளது.

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.மொஹமட் நுஸ்ரத், மொஹமட் நஃப்ரான், மொஹமட் ரஸ்தீன், மொஹமட் பரிஷ் ஆகிய நான்கு இலங்கையர்கள் இந்தியாவில் அகம தாபாத் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பின் உறுப்பினர்களாவர். இவர்கள் இந்த மாதம் 18 ஆம் திகதி இந்தியாவுக்கு சென்றுள்ளார்கள்.

இவர்கள் 4 இலட்சம் ரூபாவுக்காக தாக்குதல்களை நடத்தச் சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சியை சேர்ந்தவர்களையும், இந்துக்களையும் படுகொலை செய்வதற்காக இவர்கள் இந்தியாவுக்கு சென்றுள்ளதாகவும் 3 அல்லது நான்கு மாதங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பின் அடிப்படைவாத கொள்கைகளுக்கு ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குழுக்கள் அறிக்கைகளை சமர்ப்பித்து பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளன.ஒரு சில இஸ்லாமிய அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளன. மதரஸா பாடசாலைகள் பற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.ஆனால் அரசாங்கம் முழுமையாக பரிந்துரைகளை செயற்படுத்தவில்லை. ஆகவே பரிந்துரைகளை அலட்சியப்படுத்தாமல் செயற்படுத்த வேண்டும். இல்லையேல் இலங்கையில் மீண்டும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் போன்ற அடிப்படைவாத தாக் குதல்கள் இடம்பெறலாம்-என்றார். (அ)

# கொழும்பில் விசேட போக்குவரத்து

கொழும்பு, மே. 24

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெசாக் பண்டிகையை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பு நகரில் 5 விசேட வெசாக் வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதனால் வாகன போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும் என அவர் கூறினார்.

கங்காராம சுற்றுவட்டத்திலுள்ள வீதிகளில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, காலிமுகத்திடல் பகுதியில் வாகனங்களை நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இம்முறை வெசாக் பண்டிகையை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக சுமார் 40,000 பாதுகாப்பு பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புலனாய்வு அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோணேஸ்வரர் ஆலய வழக்கு

# முகநூலில் விமர்சனங்களை முன்வைத்தவருக்கு அழைப்பு

திருமலை, மே. 24

**கோணேஸ்வரர் ஆலய வழக்கு தொடர்பாக முகநூலில் விமர்சனங்களை முன்வைத்த நபர் ஒருவருக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.**

2024ஆம் ஆண்டு 8ஆம் இலக்க நீதிமன்ற நியாய சபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டத்தின்கீழ் சுந்தரலிங்கம் சிவசங்கரன் என்பவருக்கு எதிராகப் கடந்த புதன்கிழமை திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கை சட்டத்தரணி நாகராஜா மோகன் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவை ஆதரித்து சிரேஷ்ட சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமாரநாதன் சமர்ப்பணம் செய்திருந்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணியுடன் கனிஷ்ட சட்டத்தரணி திருமதி. சி.சண்முகியும் மனுதாரர் சார்பாக இவ்வழக்கில் ஆஜராகியிருந்தார்.

கோணேஸ்வர ஆலயம் தொடர்பாக நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகின்ற நிலையில் குறித்த எதிராளி, குறித்த வழக்கைத் தாக்கல் செய்தவர்களையும், குறித்த வழக்கில் ஆஜராகியுள்ள சட்டத்தரணிகளையும் விமர்சித்திருக்கின்றார்.

இது 2024ஆம் ஆண்டு 8ஆம் இலக்க நீதிமன்ற நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டத்தின்கீழ் குற்றச் செயலாகும் எனவும் அது தொடர்பான ஆதாரங்களை சமர்ப்பித்து குறித்த எதிராளிக்கு நீதிமன்றானது அழைப்பாணையை அனுப்புவதற்கான கட்டளையை ஆக்கும்படியாகவும் மேலும் குறித்த அழைப்பாணையானது நீதிமன்ற பிஸ்கால் மூலமும், பதிவுத்தபால் மூலமும் அனுப்பும்படியான கட்டளையை ஆக்கும்படியாகவும் வழக்காளிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளால் மன்றில் கோரப்பட்டது.

குறித்த சமர்ப்பணத்தை மன்று ஏற்றுக் கொண்டு குறித்த எதிராளிக்கு அழைப்பாணை அனுப்பும்படி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

இந்த சட்டத்தின் கீழ் ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்ட முகநூல் பாவனையாளருக்கு எதிராகத் திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கு இது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# சிவ நாகதம்பிரான் மணல் வீதியை கிறவல் வீதியாக மாற்ற நடவடிக்கை



மட்டக்களப்பு, மே. 24

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் சிவ நாகதம்பிரான் மணல்வீதியை கிறவல் வீதியாக மாற்றுவதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த திங்கள்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவ சந்திரகாந்தன் கலந்து சிறப்பித்தார்.

அத்தியாவசிய மணல் வீதிகளை கிறவல் வீதியாக மாற்றும் திட்டத்தின் கீழ் செம்மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கருவேப்பங்கேணி பிரதேசத்தில் குறித்த வீதி கிறவல் வீதி மாற்றியமைக்கப்படவுள்ளது.

4 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 250 மீற்றர் நிலமும் 4 மீற்றர் அகலமுமான சிவ நாகதம்பிரான் மணல் வீதியே கிறவல் வீதியாக மாற்றப்படவுள்ளது.

(அ)

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள்!

அம்பாறை, மே. 24


சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு மிக அவசியத் தேவையாக காணப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் வழங்கினார்.

அண்மையில் அவ்வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பிராந்திய பணிப்பாளர் வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடியதுடன், அங்கு நிலவும் தேவைகள் குறைபாடுகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து பிராந்திய பணிப்பாளர் பதில் வைத்திய அத்தியட்சகரும், மகப்பேற்று வைத்திய நிபுணருமான எல்.சி.ஆர்.றொஹானிடம் மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்களையும் கையளித்தார்.

இந்நிகழ்வில் சத்திர சிகிச்சை நிபுணர் என்.அகிலன், பிராந்திய பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.ஷாபி, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி ஏ.ஆர்.நியாஸ் அஹமட், வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் தலைவர் டொக்டர் ஏ.இஸ்ஸடீன் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

(அ)



# ஆரோக்கியமான சமூகம் என்பது உடல் ஆரோக்கியம் மட்டுமல்ல மாறாக உள ஆரோக்கியமும் இணைந்ததே!

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் தெரிவிப்பு

அம்பாறை, மே. 24

ஆரோக்கியமான சமூகம் என்பது உடல் மற்றும் உள ஆரோக்கியம் சார்ந்ததாக இருக்க வேண்டும். என சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

உளசமூக பிரச்சனைகளை குறைப்பதற்கான உளவியல் உள வளத்துணை செயலமர்வு கடந்த புதன்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பெண்கள் சார்ந்த சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உடலளவில் நாங்கள் ஆரோக்கியமாக வாழ்கின்றோம் அதிலும் தொற்று நோய், தொற்றா நோய் என இரு வகை இருந்தாலும் பார்வையில் நாம் சந்தோசமாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பது போல எல்லோருக்கும் காண்பிக்கின்றோம். ஆனால் உள்ளத்திற்குள் இருக்கின்ற பிரச்சனைகளை மறைத்துக் கொண்டு வாழ்வதனால்தான் நாம் அதிகமான தொற்றா நோய்களுக்கு உள்ளாகின்றோம்.

உள்ளத்திற்குள் நிறைய கவலைகளையும், கஸ்டங்களையும் மறைத்துக்கொண்டு அதிகமான யோசனைகளோடு வாழ்கின்றதனால்தான் உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, மனநல பாதிப்பு போன்ற பல நோய்கள் வருவதற்கு காரணமாக அமைகின்றது.



முறையான உணவுப் பழக்க வழக்கங்கள், முறையான வாழ்க்கை முறைகள் நம்மில் இல்லாததனால் நாம் நோய்களை தேடிக் கொள்கின்றோம். இதற்காக அரசாங்கம் சுகாதார துறைக்கு அதிகளவிலான தொகையை செய்கின்றது. அதே போன்று எமது தனி நபர் வருமானத்திலும் அதிகமானதொகை ஆரோக்கியத்திற்காக செலவு செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பொருளாதார ரீதியாக பல சிக்கல்களை ஏற்படுத்துவதோடு, சுகாதார சீர்கேடுகளையும் இவ் உளப் பாதிப்புக்கள் எமக்கு ஏற்படுத்துகின்றது. எனவே இவற்றை நாம் அடையாளம் காணவேண்டும்.

குறிப்பாக தங்களிடையே காணப்படுகின்ற பிரச்னைகளை முதலில் இணங்காண வேண்டும். அதுபோல் சமூக மட்ட பிரதிநிதிகள், தலைவர்கள் குறித்த பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்னைகளை இணங்கண்டு அவற்குக்கான தகுந்த தீர்வுகளை வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

உளவளம் சார்ந்த பிரச்னைகளை சமூக மட்ட தலைவர்கள், பிரதி நிதிகள்முறையாக அனுகி அதனை குறுகிய, நீண்ட கால அடிப்படையில் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அறிந்து இருக்கவேண்டும்.

உள வள ஆலோசனைகளை சமூக மட்டத்திற்கு கொண்டு சென்று உள நோய்களை குறைத்து சமூக மேம்பாட்டுக்கும், முன்னேற்றத்திற்கும் ஒத்துழைப்பு வழங்குவது சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளின் கடமையாகும்-என்றார்.

(அ)

# ஆரையம்பதியில் 2 திருட்டுகள் இருவர் பொலிஸாரினால் கைது!

மட்டக்களப்பு, மே. 24

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதியில் இரு திருட்டு சம்பவங்கள் தொடர்பில் இருவரை கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருவர் வீடொன்றில் 2 இலட்சத்து 94 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் கொள்ளை ... ஆம் திகதி அதே பகுதியில் மேய்ச்சலுக்காக விடப்பட்டிருந்த இரு மாடுகளைத் திருடியுள்ளார்.

இந்த இரு வெவ்வேறு திருட்டுச் சம்பவங்களில் கைது செய்த இருவரையும் நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




# பலஸ்தீன அரசை அங்கீகரித்தன நோர்வே, ஸ்பெயின், அயர்லாந்து!

## பதிலுக்கு தூதுவர்களை மீளழைத்தது இஸ்ரேல்

ஒஸ்லோ, மே 24

நோர்வே, ஸ்பெயின், அயர்லாந்து ஆகிய நாடுகள் பலஸ்தீனத்தை ஓர் அரசாக மே 28ஆம் திகதி முதல் முறைப்படி அங்கீகரிக்கவுள்ளன என்று அறிவித்திருக்கின்றன.

கடும் வான்வழி குண்டுவீச்சுகளை அடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை காஸாவின் தெற்கே ராஃபாவில் சன அடர்த்தி மிகுந்த பகுதிக்குள் இஸ்ரேலிய டாங்கிகள் நுழைந்தசமயத்தில் மூன்று நாடுகளிடமிருந்து இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.



மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலஸ்தீன சுதந்திரத் தனி அரசை அங்கீகரிக்க முன்வருவது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்னர் சுவீடன் 2014 இல் அதனை அங்கீகரித்திருந்தது. முன்னாள் சோவியத் நாடுகளான ஆறு ஐரோப்பிய நாடுகள் (போலந்து, பல்கேரியா, செக் குடியரசு, ருமேனியா, ஹங்கேரி, உக்ரைன்) ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு முன்னராகப் பலஸ்தீன அரசை அங்கீகரித்திருந்தன.

தற்போதைய அறிவிப்பு இஸ்ரேலில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. மூன்று நாடுகளின் இந்த முடிவு பிராந்தியத்தில் நிலைவரத்தை மேலும் மோசமாக்கும் எனக் கூறியுள்ள இஸ்ரேல் மூன்று நாடுகளின் தூதர்களையும் திருப்பி அழைத்துள்ளது.

இதே சமயம் இந்த முடிவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் வரவேற்றிருக்கிறது. ஹமாஸ் இயக்கமும் இதனை வரவேற்றுள்ளது.

இதேவேளை - பலஸ்தீன அரசை பிரான்ஸ் அங்கீகரிக்குமா என்ற கேள்வியை செய்தி ஊடகங்கள் சில எழுப்பி உள்ளன. பலஸ்தீனத்தை அரசாக அங்கீகரிப்பதில் தடை ஏதும் இல்லை என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது. ஆனால், அதற்கான தருணம் இதுவல்ல என்று வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் செஜோர்ன் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின், அயர்லாந்து ஆகியன தங்களது முடிவு இஸ்ரேலுக்கு எதிரானதோ அன்றி ஹமாஸ் இயக்கத்துக்கு ஆதரவானதோ அல்ல என்றும் அமைதியை ஏற்படுத்துவதை மட்டுமே ஒரே நோக்கமாகக் கொண்டது எனவும் தெரிவித்துள்ளன.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யஸீர் அரபாத் 1988இல் பலஸ்தீனத்தை ஒரு சுதந்திர நாடாகத் தன்னிச்சையாகப் பிரகடனப்படுத்தி இருந்தார். அதன் தலைநகரமாக கிழக்கு ஜெருசலேம் அறிவிக்கப்பட்டது.

உலகின் பெரும்பாலான நாடுகள் பலஸ்தீன அரசை ஏற்கனவே அங்கீகரித்து - ஏற்றுள்ளன. பலஸ்தீனத்தை ஐ. நாவில் இணைப்பதற்கு ஆதரவாக அதன் பொதுச் சபையில் 143 நாடுகள் அண்மையில் வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இங்கிலாந்தில் ஜூலை 4 பொதுத் தேர்தல் நடக்கும்!



லண்டன், மே 24

இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூலை 4ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார். அவர் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு பொதுத் தேர்தல் திகதியை அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

இதுகுறித்து பிரதமர் ரிஷி சுனக் கூறும்போது, "பாராளுமன்றத்தை கலைக்க இங்கிலாந்து மன்னர் சார்ள்ஸிடம் கோரினேன். இந்த கோரிக்கையை மன்னர் ஏற்றுக்கொண்டார். ஜூலை 4ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவோம். இங்கிலாந்து தனது எதிர்காலத்தைத் தேர்ந்தெடுக்கும் தருணம் இது" என்றார்.

இங்கிலாந்தில் 2025ஆம் ஆண்டு ஜனவரிக்குள் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும். இது தொடர்பாக பிரதமர் ரிஷி சுனக் 2024ஆம் ஆண்டு பிற்பகுதியில் தேர்தல் நடைபெறும் என்று கூறிவந்தார். இதனிடையே தேர்தல் திகதி வெளியாகி உள்ளது.

இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக் கடந்த 2022 ஒக்ரோபர் மாதம் கன்சர்வேட்டிவ் கட்சி தலைவராக நியமிக்கப்பட்டார். அதன்பின் பிரதமராக பொறுப்பேற்றார். ரிஷி சுனக், பிரதமராக முதன்முறையாக சந்திக்கும் தேர்தல் இதுவாகும். (ஐ)

# வியட்நாம் ஜனாதிபதியாக டோ லாம் பதவியேற்றார்!



ஹோசிமின், மே 24

வியட்நாமின் புதிய ஜனாதிபதியாக அந்நாட்டின் பொது பாதுகாப்பு அமைச்சர் டோ லாம் நேற்று முன்தினம் பதவியேற்றார்.

முந்தைய ஜனாதிபதி வோ வான் துவோங் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் அவர் பதவி விலகினார்.

முக்கிய அரசாங்க உறுப்பினர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் இந்த ஊழல் குற்றச்சாட்டில் தொடர்புடையவர்கள் என்று தெரிய வந்த நிலையில் இந்த ஊழல் விவகாரம் வியட்நாம் அரசியலில் பூதாகரமாக வெடித்தது.

ஊழல் தடுப்பு குழுவின் உபதலைவராக தற்போது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டோ லாம் இருந்த நிலையில் தனது அரசியல் போட்டியாளர்களை வீழ்த்துவதற்காக இந்த ஊழல் விவகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டார் என்ற குற்றச்சாட்டும் அரசியல் விமர்சகர்களால் முன்வைக்கப்படுகிறது. (ஐ)



# நைஜீரியாவில் தாக்குதல் 40 பொதுமக்கள் மரணம்!

நைஜர், மே 24

நைஜீரியாவில் கிராமம் ஒன்றுக்குள் புகுந்து ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 40 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வடமத்திய பகுதியில் ஆயுதமேந்திய குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்கள் அடிக்கடி பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் வேஸ் மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றுக்குள் நேற்று முன்தினம் நள்ளிரவுவேளை புகுந்த ஆயுதக் குழுக்கள் வாசின் ஜூராக் சமூகத்தினரை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். இதில் 40 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

பின்னர் அக்கும்பல் அங்கிருந்து தப்பி சென்றது. தகவல் அறிந்து பொலிஸார் அங்கு வந்து காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

இந்த தாக்குதலுக்கு இது வரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை.

இந்த பிராந்தியத்தில் நாடோடி மேய்ப்பர்கள்-கிராம விவசாயிகளுக்கு இடையே நீர், நிலம் தொடர்பாக பிரச்னை இருந்து வருகிறது. இதில் இரு தரப்புக்கும் இடையே மோதல் நிலவகிறது என்பதும் நினைவுகூரத்தக்கது. (ஐ)

# ரைசியின் இறுதிச்சடங்கில் பல்லாயிரம் மக்கள் பங்கேற்பு



தெஹ்ரான், மே 24

பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஜனாதிபதி ரைசி மற்றும் அமைச்சர் உள்ளிட்ட 9 பேரின் இறுதிச் சடங்குகளையும் ஈரானின் உச்ச அதிகாரம் படைத்த மூத்த மத தலைவர் அயதுல்லா அலி கமேனி செய்து வைத்தார்.

ஈரான் - அஜர்பைஜான் இடையே ஓடும் அராஸ் நதியின் குறுக்கே இரு நாடுகளும் இணைந்து அணையை கட்டின. இதை திறந்து வைப்பதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈரான் ஜனாதிபதி அஜர்பைஜான் சென்று திரும்பினார்.

அப்போது ஏற்பட்ட ஹெலிகொப்டர் விபத்தில் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் உசைன் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் மூத்த அதிகாரிகள் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தாய்வானை சுற்றி சீனா போர் பயிற்சி



பீஜிங், மே 24

தாய்வானை சுற்றி நேற்று காலை முதல் போர் பயிற்சியை தொடங்கியுள்ளது சீனா. இந்தப் போர் பயிற்சி இரு நாட்கள் தொடரும் என்று அறிவித்துள்ளது.

தாய்வானை தனது நாட்டின் ஒரு பகுதி என்று சீனா உரிமை கொண்டாடி வருகிறது. இதற்கு தாய்வான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்த விவகாரத்தில் தைவானுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது.

தாய்வானின் புதிய ஜனாதிபதியாக வில்லியம் லாய் சமீபத்தில் பதவியேற்றுள்ள நிலையில் இந்தப் போர் பயிற்சியை ஆரம்பித்துள்ளது சீனா.

சீனாவின் போர் விமானங்கள், போர் கப்பல்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

சீனாவின் இந்த நடவடிக்கையை தாய்வான் கண்டித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் மூன்றில் ஒரு பகுதியினர் கடன் தேவைகளினால் அந்தரிப்பு!

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, மே. 24

**நாட்டின் சனத்தொகையில் 34.4 வீதமானோர் கடன் தேவையினால் அவதியுறுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திருமதி அசுசா குபோடா தெரிவித்தார்.**

இலங்கை மத்திய வங்கியில் மே 21 ஆம் திகதி இலங்கையின் நிதி எழுத்தறிவுப் பாதை வரைபடத்தை வெளியிடும் நிகழ்வில் அவர் இதனை கூறினார்.

இந்த நாட்டில் பெண்கள் மற்றும் இளைஞர் சமூகம் பொருளாதார ரீதியாக சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகவும், இந்த நாட்டில் பெண்களுக்கு நிதி அறிவு மற்றும் நிதி தொடர்பான தகவல்களை வழங்க வேண்டிய தேவை இருப்பதாகவும் வதிவிடப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

கடன் மேலாண்மை, சமூகப் பாதுகாப்பு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு நிதி கல்வியறிவு பற்றிய அறிவு மிகவும் முக்கியமானது என்றும் நிதியியல் கல்வியறிவு மிகவும் அவசியம் என்றும் அவர் கூறினார். (அ)

# எரிபொருள் விற்பனை சடுதியாக அதிகரிப்பு!

கொழும்பு, மே. 24

கடந்த சில வாரங்களில் எரிபொருள் விற்பனை குறைந்துள்ளதாகவும், ஆனால் வெசாக் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் எரிபொருள் விற்பனை வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளதாகவும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த சில நாட்களாக எரிபொருள் பாவனை அதிகரித்து வருவதால், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் வழமையை விட அதிகமான எரிபொருள் இருப்புக்களை பெற கட்டளை அனுப்பியுள்லதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் எரிபொருள் விற்பனை மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுவதாக விநியோகஸ்தர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சிங்கள, தமிழ் புத்தாண்டு தினங்களில் மட்டும் ஓரளவு விற்பனை நடந்ததாக அவர்கள் கூறினர்.

அத்துடன், வெசாக் நிறைவடைந்ததன் பின்னர் எரிபொருள் விற்பனை முன்பு போலவே குறையும் என எரிபொருள் விநியோகஸ்தர்கள் மேலும் தெரிவித்தனர். (அ)

# மரம் முறிந்து வீழ்ந்ததில் ஒரு பிள்ளையின் தாய் பலி

கொழும்பு, மே. 24

குளியாப்பிட்டிய - மாதம்பே பிரதான வீதியில் சுதுவெல்ல பகுதியில் நேற்று முன் தினம் புதன்கிழமை பாரிய மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாதம்பே, கல்முருவ பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கல்முருவயிலிருந்து சிலாபம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவேளை, கடும் மழை காரணமாக வீதியோரத்திலிருந்த பாரிய மரமொன்றுக்கு கீழ் நின்றுள்ளார்.

இதன் போது திடீரென அந்த மரம் இவர் மீது முறிந்து வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தீக்காயங்களுடன் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் ஊசி ஏற்றிய பின் உயிரிழப்பு

கொழும்பு, மே. 24

தீக்காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபரொருவர் ஊசி செலுத்தப்பட்டதன் பின்னர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தீக்காயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 17 ஆவது விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அங்கு இவருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரும் வைத்தியருமான குமார விக்கிரமசிங்க தெரிவிக்கையில்-

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த நபர் தடுப்பூசியைச் செலுத்தியதால் உயிரிழந்தாரா அல்லது வேறு காரணம் உள்ளதா என விசாரணைகளின் பின்னர் கண்டறிய முடியும்.

எவ்வாறிருப்பினும், உயிரிழந்த நபருக்குச் செலுத்தப்பட்டதாகக் கூறப்படும் தடுப்பூசியானது ஏற்கனவே மருத்துவ பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# கோட்டாபய காலத்தில் விமர்சித்தோர் இன்று வரிச்சலுகையை வாக்குறுதியாக்கியுள்ளனர்!

## எதிர்க்கட்சி மீது ஷெஹான் சேமசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 24

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் வழங்கப்பட்ட வரிச்சலுகைகளை கடுமையாக விமர்சித்த எதிர்க்கட்சி தற்போது வரிச்சலுகையை தேர்தல் வாக்குறுதியாக மாற்றியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமது ஆட்சியில் வருமானம் ஈட்டும் போது வரி வீதம் மற்றும் பெறுமதி சேர் வரி வீதம் குறைக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி கூறியது வெறும் வாழ்த்து கோஷம் மாத்திரமே என அவர் சுட்டிக்காட்டினார்.

எந்தவொரு தரப்பினரும் பகுத்தறிவற்ற முறைகள் மூலம் வரி வீதங்களை குறைக்க முயற்சித்தால், அது நாட்டை பின்னோக்கி நகர்த்துவதுடன் வரிசை யுகத்தை நோக்கி இட்டுச்செல்லும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், குறைக்கப்பட்ட வரி வீதங்களினால் இழந்த வருமானத்தை ஈட்டுவதற்கு பண அச்சடிப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், புதிய மத்திய வங்கி சட்டத்தில் இதற்கான குறைந்தபட்ச ஏற்பாடுகள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில், மத்திய வங்கியின் சுதந்திரத்திற்கு சவால் விடுவதையே எதிர்க்கட்சி விரும்புவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். (அ)

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவிய சந்தேக நபர் கைதானார்!

கொழும்பு, மே. 24

அஹுங்கல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதானை பிரதேசத்தில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேக நபர் அ/ஹங்கல்ல, வெலிகந்தை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகந்தை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இவர் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த நபர் தொடர்பில் கண்காணித்து துப்பாக்கிதாரிகளுக்குத் தகவல் வழங்கி உதவி செய்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அஹுங்கல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வீதியில் விழுந்த மரத்தில் மோதி மோ.சைக்கிளில் சென்றவர் பலி!

கொழும்பு, மே. 24

ஹங்வெல்ல பிரதேசத்தில் வீசிய பலத்த காற்றினால் வீதியில் விழுந்த மரத்தில் மோதி மோட்டார் சைக்கிளில் சென்ற நபரொருவர் நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மற்றொரு குழுவினருடன் வெசாக் பண்டிகைக் கால உணவு வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கான மின் உற்பத்திக்கான எரிபொருளை எடுத்து வந்து கொண்டிருந்த போது வீதியின் குறுக்கே விழுந்த மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த நபர் 47 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான உபுல் அநுருத்த தெஹிவல லியனகே என தெரிவிக்கப்பட்டது. (அ)

# வெசாக் தினத்தை முன்னிட்டு நாடு முழுக்க 18,000 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில்!

கொழும்பு, மே. 24

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் வெசாக் தோரணங்கள், தன்சல்கள் உள்ளிட்ட மத நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்காக நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதற்காக 18 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் நாடு முழுவதும் 419 வெசாக் வலயங்களும் 321 விசாக தோரணங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பூரணை தினத்தை முன்னிட்டு நேற்றும் இன்றும் 3,000இற்கும் அதிகமான தன்சல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் சுகாதாரத் தரம் தொடர்பில் முழுமையாக ஆய்வு செய்யப்படும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். (அ)

# மூன்று இலட்சம் வாடிக்கையாளர்களுக்கு மோசமான வானிலையால் மின் துண்டிப்பு!

கொழும்பு, மே. 24

மோசமான காலநிலை காரணமாக கடந்த 3 நாட்களில் 3 இலட்சத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது உத்தியோ[illegible] கபூர்வ எக்ஸ் கணக்கில் குறித்த [illegible] தகவல்களைப் பதிவு செய்துள்ளார்.

இதேவேளை மின்சாரத்தை சீரமைக்க மேலதிக சேவை ஊழி[illegible] துண்டிக்கப்பட்ட இடங்களுக்கு அடுத்த 24 மணித்தியாலங்களில் மின்சாரம் விநியோகிக்கப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, மின்சார பாவனையாளர்கள் 1987 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு அல்லது குறுஞ்செய்தி அனுப்பி மின்வெட்டு தொடர்பில் அறிவிக்க முடியும் என அமைச்சர் தனது அறிவிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையை...

அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. உண்மை - நீதி - இழப்பீடு போன்றவற்றை வழங்குவதற்கு பதிலாக இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களின் சமூகத்தினரையும் மௌனமாக்க முயல்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் - துஷ்பிரயோகங்கள் நிகழாமல் தடுப்பதற்கும் மேலும் சர்வதேச நடவடிக்கைகள் அவசியம் என்பது இதன் மூலம் புலனாகின்றது.

மே 18 நினைவேந்தல் தினத்துக்கு முன்னர் வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளை பொலிஸார் குழப்ப முயன்றனர். போரின்போது நிலவிய பட்டினியை வெளிப்படுத்தும் விதமாக வழங்கப்படும் கஞ்சியை தயாரித்து வழங்கியமைக்காக நால்வர் கைது செய்யப்பட்டு ஒரு வாரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலரும் ஏனையவர்களும் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்வதை தடை செய்யும் விதத்தில் அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவுகளை பெற்றிருந்தனர். சில இடங்களில் பொலிஸார் தலையிட்டு நிகழ்வுகளை தடுத்தனர் அல்லது மக்கள் அங்கு செல்வதைத் தடுத்தனர்.

ஐக்கிய நாடுகளின் புதிய அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும். இதன்படி, வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இலங்கையில் நடந்தன என்பதையும் அதன் அளவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது தொடர்பாக உடனடி - நம்பகத்தன்மைமிக்க விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். மனித புதைகுழிகளை தோண்டுவதற்கு சர்வதேச தொழில்நுட்ப உதவியை பெறவேண்டும்.

2009 போரின் இறுதி மாதங்களில் இராணுவம் தாமே அறிவித்திருந்த போர் தவிர்ப்பு வலயங்களின் மீது குண்டுகளை வீசி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை கொன்றது. இதேநேரத்தில், பின்வாங்கிய விடுதலைப் புலிகள் மக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தினர். புலிகளின் இறுதித் தோல்வியின் பின்னர் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். சட்டத்துக்கு புறம்பாக இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

மேலும், இலங்கை அரசாங்கம் ஒரு சுதந்திரமான வழக்குரைஞர் அதிகாரத்தை ஏற்படுத்த வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் உட்பட துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுக்கும் அனைத்து சட்டங்களையும் நீக்கவேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பணிமனை முன்வைத்துள்ள பரிந்துரைகளை வெளிநாட்டு அரசாங்கங்கள், ஐக்கிய நாடுகள் அமைப்புகள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடும் வேதனையை - துன்பத்தை ஏற்படுத்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது. இது நாட்டில் மேலும் துஷ்பிரயோகங்கள் நிகழும் ஆபத்தை ஏற்படுத்துகின்றது.

இலங்கையின் பொறுப்புக்கூறல் செயல்திட்டத்துக்கான ஆணையை செப்ரெம்பர் அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை புதுப்பிப்பது மிகவும் அவசியம். இந்த குற்றங்களுக்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு உலகெங்கிலும் உள்ள வழக்குரைஞர்கள் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களை பயன்படுத்துவது அவசியம் - என்றும் உள்ளது. (ஐ)

## காற்றாலை...

இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- காற்றாலை மின்சாரம் அமைக்கலாம். ஆனால் அதற்கான உகந்த இடங்களை தெரிவு செய்து முன்னெடுக்க வேண்டும்.

ஆனால், மன்னார் தீவு என்பது கடல் மட்டத்தில் இருந்து சற்று குறைவான இடத்தில் காணப்படுகின்றது. இத்தீவு இச்செயல் திட்டத்திற்கு பொருத்தமானதாக இல்லை.

மன்னாரில் இரண்டு பெரும் அச்சுறுத்தல்களை மக்கள் எதிர்கொள்கின்றார்கள். காற்றாலை அமைக்கப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் செயல்திட்டத்தில் மூன்று திட்டங்கள் உள்ளன என்று கூறப்படுகிறது.

காற்றாலை அமைப்பதன் மூலம் இப்பிரதேசங்களில் எற்படுகின்ற பல விதமான பாதிப்புகளை மக்கள் ஏற்கனவே நேரடியாக அனுபவிக்கின்றார்கள்.

குறிப்பாக மீன்பிடி சமூகம் அவர்கள் பிடிக்கும் மீன்களின் தொகை குறைகின்றமை மற்றும் நீரோட்டங்களின் திசைகள் வழமைபோல் இல்லாது மாற்றமடைவது உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளால் பிடிக்கப்படுகிற மீன்களின் தொகை பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

குறிப்பாக கரைவலை மீன்பிடி சம்பந்தமான முறையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதை வைத்தும்,வேறு பல விடயங்களை வைத்தும் காற்றாலையை மன்னார் தீவுடன் சேர்ந்து அமைப்பது மன்னார் தீவுக்கு பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பது புலனாகின்றது.

எனவே, இவ் விடையங்களை உடனடியாக கவனத்தில் எடுப்போம். ஏற்கனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு ஒன்று நீதிமன்றத்தை நாடியுள்ளது. இதனடிப்படையில் மன்னாரில் இருந்து மக்கள் சார்பாகவும் இவ்வாறான ஒரு செயல்திட்டத்தை அவர்களுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு நாங்கள் எதிர்வரும் வாரம் நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம்-என்றார். (அ)

## சீரற்ற...

முன்தினம் பிற்பகல் மோட்டார் சைக்கிளொன்றின் மீது மர மொன்று முறிந்து வீழ்ந்து பெண்ணொருவர் உயிரிழந்தார். இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை படுகாயமடைந்து மாரவில ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளார். 36 வயதான பெண்ணொருவரே உயிரிழந்தார்.

பலாங்கொடை - இராசகலை - ஹெரமிட்டிகல 54 ஆவது பிரிவில் நேற்று முன்தினம் இரவு மரமொன்று முறிந்து வீழ்ந்தமையால் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்தார்.

18 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 8 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

3 வீடுகள் முழுமையாகவும் 973 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

சீரற்ற காலநிலையால் புத்தளம் மாவட்டத்திலேயே பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## திருகோணமலை...

நிதர்சன் அதிரேஸ் படுகாயமடைந்து திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினர் நேற்று மட்டக்களப்புக்கு காரில் சென்றுகொண்டிருந்தபோது, கார் வீதியை விட்டு விலகி விபத்துக்கு உள்ளானது. இதில், சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரின் சகோதரன் படுகாயமடைந்தார். மூதூர் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

காரில் பயணித்த சிறுமியின் பெற்றோர் காயங்கள் எதுவுமின்றி தப்பித்தனர். சிறுமியின் தாயாரான நிதர்சன் தர்சினி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவி செயலாளராவார்.

இந்த விபத்து தொடர்பில் ஈச்சிலம்பற்று பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## கொரிய...

வழங்கப்பட்டுள்ளது.

சுகந்தினி "அமரா" அமைப்பின் மூலமாக - இலங்கையின் படைத் தரப்புகளின் அடக்குமுறை மற்றும் துன்பங்களுக்கு உள்ளான - போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் உரிமைகள் மற்றும் வலுவூட்டலுக்காக போராடி வருபவராவார்.

"2009 இனப் படுகொலையில் இருந்து தப்பிய அவர் இராணுத்தின் பாலியல் வன்முறைக்கு உள்ளானவர். இராணுவத்திடம் அனைத்தையும் இழந்த ஏராளமான பெண்களுக்கு தைரியம் - நம்பிக்கையின் அடையாளமாக அவர் நிற்கிறார் என்று தென்கொரிய மே 18 அறக்கட்டளை கூறியது.

சர்வதேச கவனமும் ஒத்துழைப்பும் ஒற்றுமையுமே இலங்கை படைகளால் இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் பற்றிய உண்மையை வெளிக்கொணர முடியும் என்று நாங்கள் நம்புகிறோம் என்றும் அந்தக் குழு இதன்போது வலியுறுத்தியது.

தான் விடுதலை (புலிகள்) இயக்கத்தில் இணைந்ததன் நோக்கம் இரண்டு என்று சுகந்தினி கூறியுள்ளார். ஒன்று, சிங்கள அரசின் அடக்குமுறைகளில் இருந்து தமிழர்களை விடுவிப்பது. மற்றையது, இராணுவ எந்திரத்தின் பாலியல் வன்முறைகளில் இருந்து தமிழ் பெண்களை காப்பது. 2009 போர் முடிவடைவதற்கு முன்னர் புலிகளின் ஆட்சியில் பெண்களின் பாதுகாப்பும் கௌரவமும் குறிப்பிடத்தக்களவு உறுதிப்படுத்தப்பட்டது - என்றும் அவர் கூறினார்.

2009 இனப்படுகொலை உச்சக்கட்டத்தில் இலங்கை இராணுவம் பாலியல் வன்முறை, சித்திரவதைகளை கட்டவிழ்த்தது. இது பெண்களுக்கு மட்டுமல்ல, சிறுவர்கள், முதியவர்களுக்கு எதிராகவும் நிகழ்த்தப்பட்டது.

விருது நிகழ்வில், தான் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு வவுனியா ஜோசப் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு பயங்கர சித்திரவதைகளை எதிர்கொண்டதை சுகந்தினி நினைவுகூர்ந்தார். இராணுவம் என்னை இடைவிடாது சித்திரவதை செய்தது. தளபதி முதல் சிப்பாய்கள் வரை என்னை தொடர்ந்து பலாத்காரம் செய்து அதிர்ச்சிக்கு உள்ளாக்கினர். மாதவிடாய் நாட்களில்கூட உடையின்றி காணப்பட்டேன். ஆடைக்காக கெஞ்சியபோது, பிரபாகரனிடம் உள்ளாடைகளை கேட்குமாறு கேலி செய்தனர். எனக்கு இந்தக் கொடுமை இழைக்கப்பட்டபோது அதே அறையில் 11 பெண்கள் இருந்தனர். துரதிர்ஷ்டவசமாக அவர்களில் இருவர் உயிரிழந்துவிட்டனர் ஏனையோர், பேசமுடியாதளவு அதிர்ச்சியடைந்திருந்தனர்.

இந்த அனுபவங்களில் இருந்து மீள பல பெண்கள் போராடி வருகின்றனர். சித்திரவதைகளால் பலர் மனநல பிரச்னைகளை அனுபவித்து வருகின்றனர். இந்த அனுபவங்கள்தான் பெண்களுக்கான சுதந்திரம் - அதிகாரமளித்த அனைத்து வகையான துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவும் நான் போராட உதவுகிறது என்று இதன்போது அவர் குறிப்பிட்டார். (ஐ)

## ஜனாதிபதி...

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் உரித்து தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உரிமங்களை வழங்கவுள்ளார். அத்துடன், கிளிநொச்சி வைத்தியசாலை, யாழ். போதனா வைத்தியசாலை வளாகங்களில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத் தொகுதிகளையும் அவர் திறந்து வைக்கவுள்ளார்.

அத்தோடு, வடக்கில் இளைஞர்களுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பொன்றிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்வாறு 10 முக்கிய நிகழ்வுகளில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். அது மாத்திரமின்றி வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இவ்விஜயத்தின்போது விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சர்வதேசத்தின்...

வேதனையானது - என்றும் அவர் கூறியுள்ளார்.

2002ஆம் ஆண்டு இலங்கையில் சமாதான முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவராக செயல்பட்ட எரிக் சொல்ஹெய்ம் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக உள்ளார். அவர்ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

அத்துடன், முள்ளிவாய்க்காலில் சிக்கியிருந்த பொது மக்களையும் புலிகள் இயக்க உறுப்பினர்களையும் சர்வதேச நாடுகளின் பிரசன்னத்துடன் பதிவு செய்து கப்பல் மூலம் போர் வலயத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான சர்வதேச முயற்சி 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் முன்னெடுக்கப்பட்டது.

அந்த முயற்சியை இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் பின்னணியில் இருந்து ஊக்கப்படுத்தின. அதுமட்டுமின்றி, ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய பொதுச் செயலாளர் பான் கீ மூனும் தேவையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருந்தார்.

போர் வலயத்தில் சிக்கியிருந்த பொது மக்கள், புலிகள் இயக்க உறுப்பினர்களை அங்கிருந்து வெளியேற்றி நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு அழைத்துச் செல்வதும் அத்துடன், புகலிடக் கோரிக்கையை ஏற்கும் நாடுகளுக்கு அவர்களை அழைத்துச் செல்வதுமே இதன் திட்டம். அனைத்து முன்னேற்பாடுகளும் நிறைவடைந்து இறுதிக் கட்ட ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக நேரடியாக நான் வருவதற்கு தயாரான போது புலிகளின் தலைவர் பிரபாகரன் இந்தத் திட்டத்தை நிராகரித்தார். இது கவலை தரும் விடயமாகும்.

அவர் இதனை ஏற்றிருந்தால் போரின் இறுதிக்கட்டத்தில் ஏற்பட்ட இழப்புகளை தவிர்த்திருக்கலாம். பல்லாயிரக்கணக்கான பொது மக்களும், புலிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் தற்போதும் எம் மத்தியில் உயிருடன் இருந்திருப்பர். இராணுவ ரீதியில் நீண்டகாலமாக வெற்றிகரமாக செயல்பட்டு பெரும் கட்டமைப்புகளை உருவாக்கிய பிரபாகரன் இறுதி 3 வருடங்களில் மேற்கொண்ட தீர்மானங்கள் அனைத்தையும் பிழையானவை என்றே நான் கருதுகிறேன்.

எந்தவிதமான சமரசத்துக்கோ - தீர்வுகளுக்கோ தயாரில்லாது இருந்த பிரபாகரன், அவர் நம்பியதைப் போன்று இலங்கை இராணுவத்தினருடன் மரபு வழி போரில் தொடர்ந்தும் ஈடுபட முடியாத நிலையில் ஆயிரக்கணக்கான மக்களையும் அழிவை நோக்கி கொண்டு சென்றார் - என்று கூறியிருந்தார். (ஐ)

## பெரமுனவின்...

தேர்தல் முதலில் நடத்தப்படும் என ஜனாதிபதி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தினால் அது ஜனாதிபதிக்கும் நாட்டுக்கும் பாதகமாக அமையும்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதியின் பக்கம். ஆகவே அந்தக் கட்சியின் தலைவர் யார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக களமிறக்குமாறு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ராஜபக்ஷர்களிடம் வலியுறுத்தியுள்ளார்கள். பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களாணையுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பண்டாரநாயக்கா குடும்பத்துக்கு ஏற்பட்ட அரசியல் நிலைமை தமக்கும் ஏற்படுமோ என ராஜபக்ஷர்கள் அச்சமடைகிறார்கள்.


நாட்டு மக்கள் தம் பக்கம் என்று நினைத்துக்கொண்டுள்ள பொதுஜன பெரமுனவுக்கு இந்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல் தகுந்த பாடத்தை கற்பிக்கும். அவர்களின் வேட்பாளர் யார் என்பதை நாங்களும் எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சீனி வரி ஊழலால் இலாபம் கிட்டவில்லை!

## நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, மே 24

**சீனி வரி ஊழல் காரணமாக இழக்கப்பட்ட 50 கோடி ரூபாய் வரையான இலாபத்தை வரியாக பெற்றுக்கொள்வதற்கு தற்போது முடிந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம் பிலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பாராளுமன்றில் அவர் ஆற்றிய உரையில், சீனி வரி ஊழல் காரணமாக இழக்கப்பட்ட 50 கோடி ரூபாய் வரையான இலாபத்தை வரியாக பெற்றுக்கொள்வதற்கு தற்போது முடிந்துள்ளது.

சீனி வரி ஊழல் ஊடாக அரசுக்கு 1. 7 கோடி ரூபாய் வரையான இலாபம் கிடைக்காது போனது என்று உறுதிப்படுத்தியதுடன், சீனி இறக்குமதி நிறுவனங்களில் வரி வருமானம் ஊடாகப் போன அந்த நிதியிலிருந்து ஒரு பகுதியை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான ஆய்வறிக்கை விரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)



# தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்றும் தொடர்ந்தது போராட்டம்!

யாழ்ப்பாணம், மே 24

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் ஒரு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில் நேற்றும் அந்தப் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் மக்களின் காணியை ஆக்கிரமித்து இந்த விகாரை கட்டப்பட்டது. இந்த விகாரை அகற்றப்பட வேண்டும் என்று கூறி ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், காணியின் உரிமையாளர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# ரூ. 51 இலட்சம் பெறுமதியான சிகரெட்களுடன் இருவர் கைது

கொழும்பு, மே 24

51 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 51 ஆயிரத்து 600 வெளிநாட்டு சிகரெட்களுடன் பெண் உட்பட இருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

சிலாபம், மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய வர்த்தக பெண்ணொருவர் நேற்று அதிகாலை 05.15 மணியளவில் இந்தியாவிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த நிலையில் 17 ஆயிரத்து 200 வெளிநாட்டு சிகரெட்களுடன் கைது செய்யப்பட்டார்.

இதேபோன்று, கொழும்பு, மோதரை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயது வர்த்தகரொருவர் டுபாயிலிருந்து வந்த விமானத்தில் 34 ஆயிரத்து 400 வெளிநாட்டு சிகரெட்களுடன் கைது செய்யப்பட்டார்.

கைதானவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சிகரெட்களின் பெறுமதி 51 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ)

# தோட்டத் தொழிலாளர் சம்பள விவகாரம் மீண்டும் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மே. 24

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

2024 ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, நாளாந்த சம்பளமாக 1,350 ரூபாவும் நாளாந்த விசேட கொடுப்பனவாக 350 ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கமைய நாளாந்த மொத்த கொடுப்பனவாக 1,700 ரூபா வழங்கப்படவுள்ளதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மேலதிக கொழுந்து கிலோ கிராம் ஒன்றுக்கு 80 ரூபா வீதம் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் தொடர்பில் சில படிமுறைகளை முன்னெடுப்பதற்கு நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிப்பதாக அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்த போதிலும், சில தோட்டக் கம்பனிகள் இணக்கம் தெரிவிக்காததுடன் சில காரணங்களையும் கூறின.

இந்நிலையில், இது தொடர்பில் மூன்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அவையாவன,

01.ஒவ்வொரு தோட்ட நிறுவனமும் மதிப்பிடப்பட்ட சம்பளத்தை வழங்குவதற்கான திறனை ஆராய்வதற்கு குழுவொன்றை நியமித்தல்.

02.தவறான முகாமைத்துவம் காரணமாக தொழிலாளர்களின் சம்பளத்தை செலுத்துவதற்கு தவறும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கான காணி குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

03.அவ்வாறான தோட்டக் கம்பனிகளுடனான காணிக் குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்யக்கூடிய வகையில் சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான படிமுறைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# நாகபூசணி அம்மன் ஆலய திருவிழா முன்னாயத்தக் கூட்டம் நடைபெற்றது!

யாழ்ப்பாணம், மே 24

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்தக் கூட்டம் பதில் அரச அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

திருவிழா காலத்தில் வழமைபோல் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து குறிகாட்டுவான் வரையிலான இலங்கை போக்குவரத்து சேவை மற்றும் தனியார் பேருந்து சேவைகளின் ஒருவழிக் கட்டணம் 187 ரூபாய் என தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், குறிகாட்டுவானில் இருந்து ஆலயத்துக்கான படகு சேவைக்கு ஒருவழிக் கட்டணமாக 80 ரூபாய் அறவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கடற்போக்குவரத்து நேரத்திற்கமைய பேருந்து சேவை காலை 6 மணி தொடக்கம் மாலை 7.30 மணி வரையிலும் நடைபெறும்.

கடற்போக்குவரத்தில் ஈடுபடும் படகு உரிமையாளர்கள்,படகுகளை உரியமுறையில் பேணுவதுடன் படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துதல் மற்றும் பயணிகளுக்குரிய வசதிகள் இல்லாத படகுகளை சேவையில் ஈடுபடுவதை தவிர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள கள்ளு விற்பனை நிலையம் திருவிழாக் காலத்தில் பூட்டப்படும். திருடர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸ் உத்தியோகத்தர்களை பாதுகாப்பில் ஈடுபடுத்துவதுடன், வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த பிரதேச சபையால் அடையாள அட்டைகள் வழங்கப்படுதல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டது.

குறிகாட்டுவான் வீதியை சீராக்கவும் மற்றும் ஏனைய பொதுமக்களுக்கான சேவைகள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# பாகிஸ்தானிலிருந்து உருளைக்கிழங்கு ஊடாக ஐஸ் போதைப்பொருள் கடத்தல்

## நிமல் பியதிஸ்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 24

பாகிஸ்தானில் இருந்து உருளைக் கிழங்குகள் ஊடாக இலங்கைக்கு ஐஸ் போன்ற போதைப்பொருட்கள் சூட்சுமமான முறையில் கடத்தப்படுகிறது. ஆகவே இவ்விடயம் தொடர்பில் புலனாய்வு பிரிவினர் அவதானம் செலுத்த வேண்டும் என பாரா ளுமன்றத்தில் சுயாதீனமாக செயற் படும் எதிரணியின் உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் மரக்கறி வகைகளை அதிக விலைக்கு மக்கள் வாங்க வேண்டியுள்ளது. 3000 ரூபா வரையில் கரட்டின் விலை உயர்வடைந்தது.

மரக்கறி உற்பத்தியில் உருளைக் கிழங்கு உற்பத்தியே மிகவும் கடினமானது. ஒரு மூட்டை உருளைக் கிழங்கு 35000 ரூபா வரையில் சந்தையில் விற்பனையாகின்றது. உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளே அதிக கஸ்டங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

இப்போது உருளைக்கிழங்கு அறு வடை இடம்பெறுகின்ற நேரத்தில் வெளிநாட்டில் இருந்தும் உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. அவ்வாறு வெளிநாட்டில் இருந்து கொண்டு வரும் உருளைக்கிழங்குகள் பாவனைக்கு உகந்ததாக இல்லை.

இதேவேளை எனக்கு தகவ லொன்று கிடைத்ததுள்ளது. இது புலனாய்வு அதிகாரிகளுக்கு முக்கியமான தகவலாக இருக்கும். அதாவது பாகிஸ்தானில் இருந்து கொண்டுவரப்படும் உருளைக்கிழங்கு ஊடாக போதைப்பொருள் வர்த்தகம் மிகவும் சூட்சுமமான முறையில் முன்னெடுக் கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் பாவனைக்கு எடுக்கும் உருளைக்கிழங்கு உள்ளே, ஐஸ் போன்ற போதைப் பொருட்களை வைத்து கொண்டுவரும் வியாபாரமொன்று நடக்கின் றது. மிகவும் வெற்றிகரமாக இந்த வியாபாரம் நடப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் அதிகாரிகள் அவதானம் செலுத்த வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.